வானவில்

VAANAVIL
ISSUE – 31 JULY 2013

இதழ் - 31 ஆடி 2013

# 13ஆவது திருத்தத்தை ஏற்காத தமிழ் தேசியக் கூட்டமைப்பு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதின் நோக்கம் என்ன?

13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் எனவும், செய்யப்படக்கூடாது எனவும் பலத்த விவாதங்கள் சமீப நாட்களில் நடந்து வருகின்றன. இதில் குறிப்பிடக்கூடிய விசேடம் என்னவெனில், அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையிலேயே இந்த விவாதம் சூடு பிடித்திருப்பதுதான்.

அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சிங்கள இனவாதக் கட்சிகளான அமைச்சர் விமல் வீரவன்ஸ தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணி, அமைச்சர் சம்பிக்க ரணவக்க தலைமையிலான ஜாதிக ஹெல உருமய என்பன 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக அரசியல் சாசனத்திலிருந்து நீக்க வேண்டும் அல்லது அதன் சாரத்தைக் குறைக்க வேண்டும் எனக் கோரி வருகின்றன. அவர்களது இந்தக் கோரிக்கையை சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள வலதுசாரிப் பிரிவும், ஜனாதிபதியின் சகோதரரும், பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ஸவும் ஆதரிக்கின்றனர்.

அரசாங்கத்துக்கு வெளியில் உள்ள சில சிங்கள பேரினவாத பௌத்த குருமார் அமைப்புகளும் இந்தக் கோரிக்கையுடன் இணைந்து நிற்கின்றனர். சொல்லில் சோசலிஸமும் செயலில் இனவாதமும் செய்து வரும் ஜே.வி.பி, 13ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்கள் செய்வதைவிட, அந்தச் சட்டத்தையே இல்லாமல் செய்ய வேண்டும் எனக் கூறுகிறது. ஐக்கிய தேசியக் கட்சியின் சஜித் பிரேமதாச பிரிவும் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு எதிராகவே நிலைப்பாடு எடுத்துள்ளது. 1978இல் சஜித்தின் தந்தையார் ஆர்.பிரேமதாஸ பிரதமராகவும், ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஜனாதிபதியாகவும் இருக்கும் போதே, 13ஆவது திருத்தச் சட்டத்தை கொண்டு வந்த இந்திய – இலங்கை உடன்படிக்கை செய்யப்பட்டதென்பதும், அன்று அந்த நிகழ்வில் பிரேமதாச கலந்து கொள்ளாது பகிஸ்கரித்தார் என்பதும் எல்லோரும் அறிந்த ஒன்றாகும்.

மறுபக்கத்தில் இந்த 13ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்கள் எதுவும் செய்யாமல், அதை அப்படியே அமுல்படுத்த வேண்டும் என, அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகளும், தமிழ் – முஸ்லீம் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளும்,



சிறீலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள ஜனநாயக எண்ணம் கொண்டவர்களும் கோரி வருகின்றனர்.

இந்த விவாதத்தில் அரசாங்கத்தின் தலைவர் என்ற முறையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் நிலைப்பாடு என்ன என்பது தெளிவாகத் தெரியவராதுவிடினும், பாராளுமன்றத் தெரிவுக்குழு மேற்கொள்ளும் முடிவு எதுவாக இருப்பினும், அதைத்தான் அமுல்படுத்துவதாகச் சொல்லி வருகிறார்.

இந்த விடயத்தில் தமிழ் மக்களின் பிரதான அரசியல் கட்சி என்று தன்னைக் கூறிக்கொள்ளும் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்ன என்ற கேள்வி முக்கியமான ஒன்றாக இருக்கின்றது. ஏனெனில் இந்திய – இலங்கை ஒப்பந்தத்தை எதிர்த்து, அதன் மூலம் உருவான வடக்கு – கிழக்கு இணைந்த மாகாணசபையை சிங்களப் பேரினவாத ஜனாதிபதி ஆர.பிரேமதாச மூலம் கலைப்பித்த புலிகள், பின்னர் இந்திய அமைதிப்படையுடன் யுத்தமும் செய்ததுடன், இந்திய – இலங்கை உடன்படிக்கையில் இந்தியாவின் சார்பில் அந்த நேரத்தில் கைச்சாத்திட்ட பிரதமர் ராஜீவ் காந்தியையும் பின்னர் கொலை செய்தனர். அத்தகைய நாசகார சக்திகளான புலிகள் உருவாக்கிய அமைப்பே இன்றைய தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் ஆகும்.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

# ஜனநாயகத்திற்கு வலுச்சேர்க்கும் வடமாகாணசபை தேர்தல்

எதிர்வரும் செப்டம்பர் மாதம் 21ந் திகதி 38 அங்கத்தவர்களை (யாழ்ப்பாணம்-16, வவுனியா-6, மன்னார் -5, முல்லைத்தீவு-5, கிளிநொச்சி-4, அதிகப்படியான வாக்குகளின் அடிப்படையில்-2) தெரிவு செய்வதற்கான வடமாகாணசபைத் தேர்தல் நடைபெறவுள்ளது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முதன்மை வேட்பாளர் சி.வி.விக்கினேஸவரன் உட்பட, பலரால் இந்த வருடம் வடமாகாணசபைத் தேர்தல் நடைபெறாது எனக்கூறப்பட்டு வந்துள்ள போதிலும், தற்போதைய இலங்கை அரசு ஏற்கனவே அறிவித்ததின்படி, வடமாகாணசபைத் தேர்தலை நடாத்த முன்வந்ததை வரவேற்க வேண்டும்.

1987 ஆண்டில் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபை முறையை, வடக்குக் கிழக்கிலும் வாழும் மக்களுக்கான ஓர் அதிகாரப்பகிர்விற்கான அடிப்படைகள் இருப்பதாக ஏற்றுக்கொண்டவர்களும் ஏற்றுக்கொள்ளாதவர்களும் இத்தேர்தலில் பங்கேற்கிறார்கள். மாகாணசபை முறையை ஏற்றுக்கொள்ளாதவர்கள் வாக்காளர்களைப் பார்த்து, மாகாணசபை முறையை ஆதரிப்பவர்களிடம் அதிகாரங்கள் போய்விடக் கூடாது என்பதற்காகவே தேர்தலில் போட்டியிடுகின்றோமென மிகவும் வெளிப்படையாகவே பிரச்சாரம் செய்து வருகிறார்கள். இதன் மூலம் மாகாணசபைக்கு ஏதோ அதிகாரங்கள் இருப்பதை அங்கீகரிப்பவர்களாகவே இவர்கள் இருக்கிறார்கள்.

மாகாணசபைக்கு அதிகாரங்கள் போதாது என்று கூறுபவர்கள் வடமாகாணசபை தேர்தலில் வெற்றி பெற்றால் என்ன செய்யப்போகிறார்கள்? இவர்கள் நிட்சயமாக வடமாகாணசபை சரியாக இயங்கவிடாமல் செய்வதற்கு தம்மாலான எல்லா முயற்சிகளையும் எடுப்பார்கள் என்பதை நம்பலாம். இதனால் ஆளுநர் வடமாகாணசபையை கலைக்க வேண்டிய சூழலும் எழலாம். வடமாகாணசபையை முடங்க செய்யத் துடிப்பவர்களுக்கு, அது கலைக்கப்பட வேண்டும் என்பதும் சந்தேகத்திற்கிடமின்றி அவர்களின் நிகழிச்சி நிரலில் இருக்கும்.

1977 ஆண்டு பொதுத்தேர்தலுக்கு பின்னர் குறிப்பாக யாழ்பாணத்து தமிழர்களின் நாடியை பிடித்துப் பார்க்கப்போகும் ஜனநாயகச் சூழல் கொண்ட முதலாவது தேர்தல் இதுதான் என பலரால் எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில் 2009 மே மாதத்தில் முள்ளிவாய்க்காலில் புலிகள் முற்றுமுழுதாக தோற்கடிக்கப்பட்ட பின்னர், புலிகளின் பயமுறுத்தலின்றியும், புலிகள் தோற்கடிக்கப்பட்டு 4 வருடங்கள் கடந்துவிட்டதால், வீதிகளில் இலங்கை இராணுவத்தின் பிரசன்னம் வெகுவாக குறைக்கப்பட்ட நிலையிலும், மக்கள் தாங்கள் விரும்புவர்களுக்கு வாக்களிக்கும் நிலை தோன்றியுள்ளதாக கருதப்படுகின்றது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்பது வடக்கிலும் கிழக்கிலும் நிகழும் பொதுத்தேர்தல்களில் பங்கேற்பதற்பதை மாத்திரம் பிரதான நோக்காகக் கொண்டு புலிகளால் உருவாக்கப்பட்ட ஓர் அமைப்பு. ஏனெனில் தமிழர்களுக்கு தனிநாடு அமைப்பதற்காக ஆயுதம் ஏந்திப் போராடும் அமைப்பு-இலங்கை அரசால் தடை செய்யப்பட்ட அமைப்பு-தேர்தலில் போட்டியிடுவது என்பது சாத்தியமற்றதல்லவா. அதேவேளை பொதுத்தேர்தல்களை பகிஸ்கரிப்பதை நூற்றுக்கு நூறு வீதம் நடைமுறைப்படுத்த முடியாது என்பதையும், தேர்தலில் போட்டியிடுபவர்களை சுட்டுக்கொன்று கொண்டும் இருக்கமுடியாது என்பதையும் புலிகள் நன்கு உணர்ந்திருந்தனர். அத்துடன் புலிகளின் துரோகிப்பட்டியலில் இருப்பவர்களே தேர்தலகளில் வெற்றி பெற்று தமிழர்களின் பிரதிநிதிகளாக பாராளுமன்றம் போவதையும் புலிகளால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. எனவே ஆயுதம் ஏந்திப் போராடாத தமிழ் மிதவாதிகளயும் அரவணைப்பது போன்ற மாயைத்தோற்றத்தை ஏற்படுத்தவதற்காக 2001 இல் இந்த 'ஜால்ரா' அமைப்பை புலிகள் தோற்றுவித்தனர்.

புலிகளினால் உருவாக்கப்பட்டதால் புலிகளின் அழிவிற்கு பின்னர் தாமே புலிகளின் போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுப்பவர்களாக தமிழ் தேசியக்கூட்டமைப்பினர் காட்டிக்கொண்டு வருகின்றனர். இதனால் அரச எதிர்ப்புக்கும் குறுந்தேசியவாதத்திற்கும் (தமிழ் காங்கிரஸ், தமிழரசுக்கட்சி, தமிழர் விடுதலைக்கூட்டணி, மற்றும் புலிகளே இந்த சிந்தனையை அரை நூற்றாண்டுக்கு மேலாக வளர்த்து எடுத்தவர்கள்) அடிமையாக்கப்பட்ட தமிழ் மக்கள், தொடர்ச்சியாக இது போன்ற கட்சிக்கே வாக்களிக்க தள்ளப்பட்டுள்ளனர். தேர்தலில் வெற்றி பெற்றாலே மக்களின் பிரதிநிதி என்னும் அங்கீகாரம் கிடைக்கும் என்ற நிலை தொடர்வதால், தமிழ் தேசியக் கூட்டமைப்பை புலிகளின் பினாமி அமைப்பென தூற்றித் திரிந்தவர்களும், தமிழ் தேசியக் கூட்டமைப்பில் சரணடைய வேண்டிய நிலை ஏற்பட்டதுள்ளது.

வடமாகாணசபைத் தேர்தலில் மாகாணசபை முறையை ஏற்றுக்கொள்ளாத மக்கள் விரோத கட்சி ஒன்றினையே மக்கள் தெரிவு செய்யப்போகிறார்கள் என்று எமது புலன்களுக்கு தெரிந்தாலும், அது மக்களின் தீர்ப்பு என்ற வகையில் அதனை ஏற்றுக்கொள்ளும் நாகரீகம் இருக்க வேண்டும். அதேவேளையில் மக்கள் விரோத கட்சியின் கடந்தகால செயற்பாடுகளை முன்னிறுத்தியும், மாகாணசபை முறையை ஏற்றுக்கொள்தாவர்களிடம் மாகாணசபை ஆடசியை ஒப்படைப்பதின் மூலம் ஏற்படும் விளைவுகள எடுத்துக்கூறியும் மிகவும் பலமானதொரு பிரச்சாரத்தினை முன்னெடுப்பதில் தவறக்கூடாது. *

**வானவில்**

**தொடர்பு முகவரி:** 'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.
sunvaanavil@gmail.com

# என்று தணியுமிந்த கனவான்களின் அரசியல்?




**எ**திர்வரும் புரட்டாதி மாதம் நிகழும் வட மாகாணசபைத் தேர்தலில் விக்னேஸ்வரனை, கூட்டமைப்பு பல இழுபறிகளுக்குப்பின் முதலமைச்சர் வேட்பாளராகத் தெரிவு செய்தமை யாவருமறிந்ததே.

அன்றிலிருந்து இந்த விக்னேஸ்வரன் பற்றி, எனக்கு நேர் மூத்த சந்ததியினரிடம் உசாவியபோது, 'முன்னைநாள் உயர்நீதிமன்ற நீதியரசர்' என்பதற்கப்பால், எதுவித விபரமும் எனக்குக் கிடைக்கவில்லை. இதேபோலவே முன்னரும், உருத்திரகுமாரன், சுமந்திரன் சட்டத்தரணிகள் என்றும், இமானுவேல் பாதிரியாரென்றும் பதில்கள் கிடைக்கப்பெற்றேன். அவர்களது கடந்தகால வாழ்வு, மக்களுடனான உறவுகள், அர்ப்பணிப்புக்கள், உழைப்புக்கள் என்பனபற்றி எதுவித தகவல்களும் கிடைக்கப்பெறவில்லை. இவை எனது துரதிஷ்டம் என்பதைவிட தமிழ்மக்களின் துரதிஷ்டம் என்று சொல்வதே சாலப்பொருந்தும்.

முதலமைச்சர் வேட்பாளர்களாகச் சிபார்சு செய்யப்பட்ட, கூட்டமைப்பின் பட்டியலைப் பார்த்தபோது அது பல கனவான்களின் பெயர்களால் நிரம்பி வழிந்ததுகண்டு ஆச்சரியமடைந்தேன். ஓய்வுபெற்ற யாழ் உயர்நீதிமன்ற நீதியரசர் விக்னராஜா, முன்னைநாள் மாநகரசபை ஆணையாளர் சிவஞானம், உதயன் பத்திரிகையாசிரியர் வித்தியாதரன், பேராசிரியர் சிற்றம்பலம், கொழும்பு சட்டப்பேராசிரியர் வி.ரி.தமிழ்மாறன், முன்னைநாள் பாராளுமன்ற உறுப்பினர் சூசைதாசன்....என நீண்டிருந்தது. இவர்களைத் தவிர சேனாதிராஜா, சுரேஷ்பிரேமச்சந்திரன், சிவாஜிலிங்கம், போன்றோருக்கும் அப்பதவிமீது கழுகுக்கண் இருந்தது என்பதும் ஊரறிந்தகதை.

தமிழ்மக்களின் அரசியலில், கனவான்களின் ஆதிக்கம் சேர்.பொன்.இராமநாதனிலிருந்து, இன்றைய நீதியரசர் வரை நீண்டு, ஒரு வரலாற்றுப் பாரம்பரியமாக வந்துகொண்டிருக்கிறது. சேர்.பொன்.இராமநாதன், சேர்.பொன்.அருணாச்சலம், ஜி.ஜி.பொன்னம்பலம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம் போன்றோர் கொழும்பிலிருந்தவாறே அரசியல் செய்ததாக, விக்னேஸ்வரன் திருவாய் மொழிந்துள்ளார். பாராளுமன்ற உறுப்பினர்களுக்குரிய சிறப்புரிமைகளைப் பயன்படுத்தி அதற்குரிய அரசின் சலுகைகளை, வசதிவாய்ப்புக்களை அனுபவித்துக்கொண்டும், கொழும்பிலேயே வாசம் செய்துகொண்டும் தேர்தல் காலங்களில் மட்டும் யாழ்ப்பாணம் சென்று வரலாமென அவர் எண்ணுகிறார்போல் தெரிகிறது. இராமநாதன், அருணாச்சலம் போன்றோர், விக்னேஸ்வரனுடைய தாத்தாவின் உறவுக்காரர்கள் என்பதும் ஒரு சங்கதி. அந்தக்காலத்தில், பிரித்தானிய அரசுடன் பேசுவதற்கு, இராமநாதன் கப்பலில் நீண்டநாள் பயணம் மேற்கொண்டதாக, எங்கோ ஒரு மூலையில் வாசித்த ஞாபகம். இவரே, குறூ-மக்கலம் அரசியற் சீர்திருத்தச் சட்டசபைக்கு(1910), படித்த இலங்கையர் பிரதிநிதியாக முதன்முதலாகத் தெரிவுசெய்யப்பட்டமை இங்கு மீட்டுப்பார்க்கத்தக்கது. மக்கள்நலன் சார்ந்த, தேசப்பற்றுடைய அறிவாளிகள், படிப்பாளிகளே தலைமை கொடுக்கவேண்டுமென்பதே எமது வாதமாகும். மக்கள்நலன் சாராத படிப்பாளிகள், அறிவாளர்கள் மக்களின் புண்ணை மாற்றுவதற்குப் பதில், புண்ணைக்காட்டி காட்டியே தமது பிழைப்புவாத அரசியலை மேற்கொள்வார்கள் என்பதே நிஜம்

**ஆனந்ததேவன்**

இதில் தமாஷ் என்னவெனில், 2008இல் கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடந்தபோது, புலிகளின் அச்சுறுத்தலுக்குப் பணிந்து, கூட்டமைப்பு அதில் கலந்துகொள்ளாதிருந்துவிட்டு இப்போது கலந்துகொள்வதுதான். அச்சமயம், வடக்கு-கிழக்கு இணைப்பில்லாத மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதில்லையென்றும், 13வது திருத்தச் சட்டத்தின் மூலம் பிறந்த மாகாணசபை முறைமை உப்புச் சப்பற்றதென்றும், அது உக்கி உளுத்துவிட்டதென்றும்,அறிக்கைவேறு விட்டனர். கூட்டமைப்பைச் சேர்ந்த ஸ்ரீதரனோ இதற்கும் ஒருபடிமேல் சென்று, வடக்கு மாகாணசபைத் தேர்தலில் நாங்கள் பங்குகொள்ளும் மனநிலையிலில்லை, ஆனால், நாங்கள் பங்குபற்ற

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

பாரதீய பாசா பரிட்சத் என்கின்ற, கல்கத்தாவை மையமாகக் கொண்ட அகில இந்திய ரீதியிலான இலக்கிய அமைப்பு, 1995ஆம் ஆண்டு என், 'வானம் வசப்படும்' நாவலுக்குப் பரிசும் விருதும் வழங்கியது.

நான் பெற்ற பரிசுகளைச் சொல்லிக்கொள்ள இதை எழுதவில்லை. இதில் எனக்கு ஆர்வமும் இல்லை. நமது அரசு மற்றும் அரசு சார்பற்ற இலக்கிய அமைப்புகள் பரிசு பெறுகிற அந்த மொழி இலக்கிய ஆளுமைகளை எங்ஙனம் நடத்துகின்றன என்பதைச் சமூகம் அறிந்துகொள்ள வேண்டும் என்று விரும்புகிறேன்.

தமிழக அரசில் பரிசு பெறுகிற துரதிஸ்டம் வாய்க்கப்பெற்ற எழுத்தாளர்களை, அரசு அதிகாரிகள் என்கிற, இலக்கியம் குறித்த அரிச்சுவடி அறிவும் இராத, உள்ளீடுகள் இல்லாத அரசு குமாஸ்தாக்கள் மயிரிழை மரியாதையும் இன்றியே



பிரபஞ்சன்

# ஒரு தமிழ் எழுத்தாளனின் பார்வையில் தமிழகமும் மேற்கு வங்கமும்

நடத்துவார்கள். முதலில் நீங்கள் அரசால் தேர்ந்தெடுக்கப்பட்ட நூலாசிரியராக இருந்தால் அதைத் தபால் மூலமாக உங்களுக்குத் தெரிவிப்பார்கள். அழுகிப்போன, சாண நிறம் கொண்ட பழுப்புக் கவரையே அரசு பயன்படுத்தும். அது மாதிரியான, நிறைய ஸ்டாம்புகள் ஒட்டப்பெற்ற கவர்கள், உங்கள் வீட்டு வாசலில் குப்பை போல் எறியப்பட்டுக் கிடந்தால், அது அரசுக் கடிதம் என்று நீங்கள் உணர்ந்து கொள்ளலாம். உள்ளிருக்கும் கடித அளவுக்காவது அது அகல நீளம் கொண்டதாக இருக்குமா என்றால், இருக்காது. பாக்கெட்டில் வைத்துக்கொள்ளும் மணிபர்ஸ் அளவிலான உறையாகவே அது இருக்கும். என்ன காரணம்? சிக்கனமாம். உள்ளிருக்கும் மடிக்கப்பட்ட கடிதம் சேதம் அடையாமல் நீங்கள் கவரைக் கிழிக்க வேண்டும். சொரசொரத்த, உலகத்திலேயே மட்டமான ஒரு தாளில், பாதி தெளிவில்லாமல் அச்சடிக்கப்பட்ட, நீங்கள் பரிசு பெற்ற செய்தி அறிவிப்புக் கடிதமாக அது இருக்கும்.

'ஏழு கிணறில் பிள்ளையார் கோயில் தெருவில் பத்துக்குப் பத்துப் பள்ளம் தோண்டவும்' என்ற அரசு உத்தரவுத் தொனியில், உங்கள் கதைத் தொகுதி…வருசத்துச் சிறந்த நூலாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதை அறியவும், விழா தேதியும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும் என்ற செய்தியை அந்தக் கடிதம் உங்களுக்குப் பறையும். இக்கடிதத்தையும் அரசு செயலரோ, தலைமைச் செயலரோ, கலைப் பண்பாட்டுத் துறை அமைச்சரோ (நியாயமாக அரசு அமைச்சரே இதைத் தெரிவிக்க வேண்டும்) கையெழுத்திருக்கமாட்டார். செக்ஸன் குமாஸ்தாவே கையெழுத்திட்டிருப்பார். தமிழ் எழுத்தாளனுக்கு இது போதும் என்ற நினைப்புத்தான்.

விழாவின் சம்பிரதாயமான அழைப்பு உங்களுக்கு உரிய காலத்தில் வந்தாலும் வரலாம். அது ஈசன் கிருபை. உங்களுக்கு வந்திருந்த அந்த 'உத்தரவு'க் கடிதத்தை மறக்காமல் எடுத்துக்கொண்டு விழாவுக்குச் (பத்திரிகைச் செய்தியை அறிந்து) செல்ல வேண்டும். வாசலில் நிற்கும் பொலிஸ்காரர்கள், உங்களைச் சூழ்ந்துகொண்டு கடிதத்தைப் பரிசீலனை செய்வார்கள். உங்களையும் சேர்த்துத்தான். மேடைக்கு வெகு தூரத்திலிருக்கும் உங்கள் இருக்கைக்கு நீங்கள் செல்வதற்குள், ஆறு பொலிஸ் அதிகாரிகளைத் திருப்திப்படுத்தியே நீங்கள் உங்கள் இருக்கையைச் சென்றடைய வேண்டும்.

நீங்கள் எழுத்தாளர், நடப்பது இலக்கிய நிகழ்ச்சி என்றெல்லாம் கர்வம் கொண்டுவிடக் கூடாது. அரசு உங்களுக்கு 'அடக்கம்' என்பதன் பேரொழுக்கத்தைக் கற்றுக் கொடுக்கவே இருக்கிறது. முதல் மூன்று வரிசை இருக்கைகளிலும், அமைச்சர்கள், அரசியல்வாதிகள், சின்ன பெரிய மனிதர்கள், வியாபாரப் பெருங்குடி மக்கள், அரசை நத்திப் பிழைக்கிற பேராசிரியர்கள் அல்லது எதிர்காலத் துணை வேந்தர்கள் சிலரை (எல்லாரையும் அல்ல) முன் நான்கைந்து வரிசைகளில் காணக்கூடும். சினிமா புகழ் கொண்ட நடிக, நடிகையரையும் கூட நீங்கள் அங்கே தரிசிக்கக்கூடும்.

முதலமைச்சர் மேடைக்கு வரும்போது மக்கள் எல்லாரும் எழுந்து நிற்பார்கள். நீங்கள் நிற்கமாட்டீர்கள். அதனாலேயே நீங்கள் கண்காணிக்கப்படவும் வாய்ப்புண்டு. கூட்டத்தில், அது எந்த வகைக் கூட்டமாக இருந்தாலும் அதன் உள்ளடக்கம் தெரியாமலேயே, அது குறித்த வெட்க உணர்ச்சியும் இல்லாமலேயே அரசு சார்ந்த அல்லது சாராத பிரமுகர்கள் இரண்டு பேராவது மிக அபத்தமாகச் சொற்பொழிவு

ஆற்றுவார்கள். முதலமைச்சர் எழுத்தாளராக இருக்கும் ஆபத்து மிகுந்த நாடு தமிழ்நாடு. எனவே, முதலமைச்சர் எழுத்தின் கீர்த்தி பற்றியே தன் பேச்சின் உள்ளீடை நிரப்புவதில் குறியாகப் பேசுபவர்கள் இருப்பார்கள். கூச்சம் என்கிற மனித குலத்தின் அருங்குணம், பேசுபவர்களுக்கும், யார் குறித்துப் பேசப்படுகிறதோ அவருக்கும் இந்த நாட்டில் இல்லை.

அப்புறம், பரிசு பெறுபவர்கள் அழைக்கப்படுவார்கள். மேடையின் கீழே அவர்கள் திபு திபு என்று போய் நிற்க வேண்டும். முதலில் நிற்பவர் மார்புக்குக் குறுக்காகக் கையை நீட்டியபடியே ஒரு பொலிஸ் ஊழியர் மப்டியில் நிற்பார். மேடையில் பட்டியலை வைத்துக்கொண்டு ஒருவர் நிற்பார். ஒருவர் பரிசு பெறும்போதே, மற்றவரைத் தோளைப் பிடித்து மேடையின் பக்கம் தள்ளுவார் ஒரு பொலிஸ்காரர். நீங்கள் பரிசோதனைக்கு உள்ளாவீர்கள். 'யோவ்...நான் சொல்லும்போது நீ போகணும்' என்று உங்களை எச்சரிப்பார். மேடையில், முதலமைச்சருடன் ஓர் அமைச்சர், இரண்டு மூன்று 'லோட்டா' பிரசங்கிகள் காணப்படுவார்கள். உங்கள் முறை வருகிற போது, ஊழின் கரம் போல ஒன்று உங்களை முதல்வரை நோக்கி உந்தித் தள்ளும். மேடையில் நீங்கள் நிற்கும், அந்தச் சிறு நிமிசங்களில், இருமல் போன்ற இயற்கை உபாதைகள் உங்களுக்கு வரவே கூடாது. மேடையின் மேலோ, கீழோ நின்றுகொண்டு நீங்கள் இருமுவது, முதல்வருக்கு இழைக்கும் மரியாதையாக – மன்னிக்கவும் – அவமரியாதையாகக் கருதப்பட நேரிடலாம். நீங்கள் எதிர்க்கட்சி விசமி என்றோ, பயங்கரவாதி என்றோ கருதப்படும் அபாயம் இருக்கவே இருக்கிறது.

நீங்கள் பரிசை வாங்கிக்கொண்டு உடனே வெளியேற முடியாது. அது ஒழுங்கற்ற, மரியாதை இல்லாத செயலாகக் கருதப்படும். பண்டிகையின் எல்லாச் சடங்கும் பூர்த்தியான பிறகே நீங்கள் வெளியேற அனுமதிக்கப்படுவீர்கள்.

தமிழ்நாட்டு அரசு உங்களைக் கௌரவித்துவிட்டது.

மேற்கு வங்கத்தின் பாரதீய பாசா பரிசைப் பெற்றுத் தங்கள் அமைப்பைக் கௌரவிக்கும்படி எனக்கு ரிஜிஸ்தர் தபால் வந்தது ஒருநாள். அழகிய வெண்மை நிறக் கவர். உள்ளே அழகான, டைப் செய்யப்பட்ட ஆங்கிலக் கடிதம். இந்திய மொழிகளில் சிறந்தவர்களைத் தேர்வு செய்யும் அமைப்பென்று தம்மை அறிமுகம் செய்து கொண்டது கடிதம். என்னை வாழ்த்தி இருந்தது. விழா நடக்கும் நாள், நேரம், நான் தங்க ஏற்பாடு செய்யப்பட்ட விடுதி, அனைத்துத் தகவலும் கொண்ட கடிதம் அது. வாழ்த்துடன் கடிதம் முடிந்தது.

விழா நடக்க இருக்கும் நாள்களுக்கு மத்தியில் இரண்டு நினைவூட்டுக் கடிதமும், டிக்கட்டுகளும் வந்தன. டிக்கெட் கிடைத்ததா என்று போனிலும் விசாரித்தது ஒரு கனிவான குரல். நானும் என் மனைவியும் அழைக்கப்பட்டிருந்தோம். என் கடைசி மகனும் என்னுடன் வந்தான். கல்கத்தாவில் நான் வரவேற்கப்பட்டேன். பாரதீய பாசா பரிசத் அரசு சாரா அமைப்பு. என்றாலும் அரசு தன் பங்கையும் அதில் செலுத்தியது...காரில் விடுதி சேர்ந்தோம். உணவு முதலான அனைத்து வசதிகளும் நிறை என்பதற்கும் மேலாகவே இருந்தது. இடைப்பட்ட நேரங்களில் நகரின் முக்கிய இடங்களைச் சென்று பார்க்க ஏற்பாடு செய்திருந்தார்கள். ஓரிடத்தில் காரை நிறுத்தி, என்னுடன் துணைக்கு வந்தவருடன் பாதை ஒரு டீக்கடையில் தேநீர் அருந்தினோம். மண் குவளையில் தேநீர் வித்தியாசமாக இருந்தது. கடைக்கு மேல்மாடியில்தான் ஜோதிபாசு (மேற்கு வங்கத்தில் 4 தடவைகள் தொடர்ந்து முதலமைச்சராக இருந்த மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவர் – வானவில்) இருப்பதாக என் துணையாளர் சொன்னார். 'சந்திக்கிறீர்களா?' என்று கேட்டார். 'வேண்டாம்' என்று விட்டேன். என்னை அவருக்குத் தெரியாது....கங்கைக் கரையில் மகிழ்ச்சியுடன் பொழுதைப் பொன் செய்தோம்.

காரில் விழா நிகழ்ச்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். மேடையில் பரிசு பெறும் என்னோடு சேர்த்து நான்கு பேர்கள். எங்களை அறிமுகப்படுத்த மூத்த கவிஞர் ஒருவர். பக்கத்தில் இருந்த தனி மேடையில் விழா அமைப்பினர் அமர்ந்திருந்தனர். என்முறை வந்தபோது, விழா அமைப்பாளர் என்னைப் பற்றியும் புத்தகம் பற்றியும் வீண் வார்த்தைகள், ஜோடனைகள் அற்ற, அறிமுக உரையை ஆற்றினார். முன்னால் இருந்த மூன்று வரிசை இருக்கைகள், இலக்கியம் சார்ந்த படைப்பாளிகள் மற்றும் அவர்கள் குடும்பத்தாருக்கு மட்டும். அதன் பிறகு அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள். யார் பேச்சிலும் அரசியல்வாதிகளின் கால்களைக் கழுவும் வார்த்தைகள் இல்லை. இலக்கியம் சாராத ஒரு சொல்லும் பேசப்படவில்லை.

என்னைப் பற்றிப் பேசி முடிந்ததும். ஆணும் பெண்ணுமான இரு இளைஞர்கள் ஒரு தட்டில் வைத்த மலர் மாலை. சால்வை, பணம் முதலான பொருட்களை ஏந்தி. இசை ஒலிக்க நான் இருந்த மேடைக்கு வந்தார்கள். மூத்த கவிஞர் சால்வையையும் மலர் மாலையையும் அணிவித்தார். பணத்தைத் தட்டோடு ஏந்தி. என்னை எடுத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். ஏனெனில் படைப்பாளியின் கரம் தாழ்ந்து. கொடுப்பவரின் கை உயரத்தில் இருக்கக்கூடாது. நான் பரிசை எடுத்துக் கொண்டு, ஏற்றுக் கொண்டேன். இது கவி தாகூர் அவருடைய சாந்தி நிகேதனில் உருவாக்கிய முறை. மேற்கு வங்கம் அந்த மரபையே பேணுகிறது. தாகூர் பரிசைத் தன் கையில் வைத்துக் கொள்வார். அறிஞர்கள் எடுத்துக் கொள்வார்கள்.

மேற்கு வங்கம் இதுபோன்ற பல கங்கைகளால் ஆசிர்வதிக்கப்பட்டிருக்கிறது. 'கங்கையிற் புனித மாய' காவிரி வற்றிப் போயிருக்கிறது.

(பிரபல தமிழக எழுத்தாளர் பிரபஞ்சனின் நூலான 'மயிலிறகு குட்டி போட்டது' என்ற நூலின் ஒரு பகுதியே மேலே உள்ள கட்டுரையாகும். இக்கட்டுரையில் தமிழக – மேற்கு வங்கப் பண்பாடுகளை தனது அனுபவம் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். தமிழகமும் ஒரு காலத்தில் பல சிறப்பான கலாச்சார விழுமியங்களைக் கொண்டிருந்தது உண்மைதான்.

தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க...

# ஈழத்து தமிழ் இலக்கியத்தின் முப்பதாண்டு தேக்க நிலைக்கு முடிவுகண்டு புதிய நீரோட்டத்தை உருவாக்க வேண்டும்!


இலங்கையில் போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்துவிட்ட சூழ்நிலையில், இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் இழுபறி நிலையில் இருந்து வருகின்ற போதிலும், வேறு பல துறைகளில் குறிப்பிடக்கூடிய முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருவதை மறுப்பதற்கில்லை. குறிப்பாக இடம் பெயர்ந்தவர்களிகளின் மீள் குடியேற்றம், புனர்வாழ்வு, உள்கட்டமைப்பு நடவடிக்கைகள், கண்ணிவெடி அகற்றுதல், பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பன ஓரளவு வளர்ச்சி கண்டுள்ளன. இந்த நடவடிக்கைகள் முழுக்க முழுக்க அரசாங்கத்தினதும், சர்வதேச அமைப்புகளினதும் பொறுப்பிலேயே நடந்தேறி வருகின்றன.

இந்த நடவடிக்கைகளுக்கு புலம்பெயர் தமிழ் சமூகம் ஏதாவது ஒரு வகையில் உதவும் என்ற எதிர்பார்ப்பு இருந்த போதிலும், அதற்கான கடமைப்பாடு அவர்களுக்கு இருந்த போதிலும், எந்தவொரு உதவையையும் அது செய்யவில்லை. இலங்கையில் போரில் ஈடுபட்ட ஒரு தரப்பான விடுதலைப் புலிகளுக்கு புலம்பெயர் சமூகம் அளித்து வந்த நிதி மற்றும் தார்மீக ஆதரவு எல்லோரும் அறிந்த ஒன்று.

ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூன் தனக்கு ஆலோசனை வழங்க நியமித்த தருஸ்மன் குழு தயாரித்த அறிக்கையில்கூட இந்த விடயம் சம்பந்தமாக புலம்பெயர் தமிழ் சமூகம் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்த போதிலும், அது சம்பந்தமாக புலம்பெயர் தமிழ் சமூகம் வெட்கமோ துக்கமோ அடையவில்லை. தான் செய்த தவறுக்கு பிராயச்சித்தமாக போரால் அழிந்த தமிழ் பகுதிகளை புனாநிர்மாணம் செய்வதற்கு உதவவும் அது தயாராக இல்லை. அதுமட்டுமல்ல, அங்கு மீண்டும் போரை ஊக்குவிப்பதில்தான் அது முனைப்புக்காட்டி வருகின்றது.

**மீரா**

எதற்கெடுத்தாலும் அரசாங்கத்தின் மீதே கடந்த 60 ஆண்டுகளாகக் குற்றம்சாட்டி வரும் தமிழ் தலைமைகள், தம்செயற்பாடுகள் நியாயமானவையாக இருப்பின், தாம் இத்தனை வருடங்களாக நடாத்தி வரும் போராட்டங்கள் ஏன் தோல்விக்கு மேல் தோல்வி அடைந்து வருகின்றன என்பதை எண்ணிப் பார்க்கவும் தயாரில்லை. இந்த சுய விமர்சனப் பார்வை அற்ற தன்மைதான், தமிழ் சமூகத்தை தொடர்ந்து இருட்டினில் தடுமாற வைக்கிறது என்பதை கொஞ்சமாவது சிந்திப்பவர்கள் – படித்தவர்கள் உட்பட எவருமில்லை.



இன்று அரசியல் வங்குரோத்துத்தனம் மட்டுமின்றி, கலாச்சார வங்குரோத்துத்தனமும் உள்ள ஒரு சமூகமாக இலங்கைத் தமிழ் சமூகம் மாறி வருகின்றது. “இலக்கியத்தின் நசிவு தேசத்தின நலிவு, வீழ்ச்சியில் இரண்டும் இணைந்தே இருக்கும்” என பிரெஞ்சு அறிஞன் காதே ஒரு சமயத்தில் குறிப்பிட்டான். இந்த தீர்க்கதரிசனமான வார்த்தைகள் இன்றைய இலங்கைத் தமிழ் சமூகத்துக்கும் அச்சொட்டாகப் பொருந்தி வருகின்றது.

நவீன தமிழிலக்கியத்தை வளர்த்தெடுத்ததில் தமிழக எழுத்தாளர்களுக்கு சோடை போகாத அளவுக்கு இலங்கைத் தமிழ் எழுத்தாளர்களுக்கும் ஒரு பங்கு இருந்ததை எவரும் மறுக்க முடியாது. குறிப்பாக சிறுகதை, கவிதை துறைகளில் ஈழத்து எழுத்தாளர்கள் பல புதுமைகளையும் சாதனைகளையும் சாதித்து வந்துள்ளார்கள்.

1950கள், 60கள், 70கள் ஈழத்து தமிழ் இலக்கியத்துறையின் பொற்காலம் எனக் குறிப்பிடலாம். இக்காலத்தில் கலை மக்களுக்காக, கலை கலைக்காக என்ற இரு போக்குகள் ஈழத்து இலக்கியப் பரப்பில் வெளிப்படையாக துலங்கும் அளவுக்கு ஆக்க இலக்கிய முயற்சிகள் துடிப்புடன் செயற்பட்டதை அவதானிக்க முடியும். இலக்கியம் சம்பந்தமாக எதிரும் புதிருமான இரு சித்தாந்தப் போக்குகள் இருந்த போதிலும், எழுத்தாளர்கள் அனைவரும் தமது உள்ளக்கிடக்கைகளை,

உணர்ச்சிக் கருவூலங்களை தயக்கம் எதுவுமின்றி சுதந்திரமாக எழுத்தில் வடிக்கும் நிலைமை இருந்தது. அது எழுத்துத்துறையில் மட்டுமின்றி நாடக அரங்கியலிலும் அமைந்திருந்தது.

இத்தகைய ஒரு நிலையை உருவாக்குவதிலும், பாதுகாப்பதிலும், வளர்த்துச் செல்வதிலும் இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம், யாழ் இலக்கிய வட்டம், கிழக்கிலங்கை தமிழ் எழுத்தாளர் சங்கம் போன்ற அமைப்புகளும், பல உள்ளூர் கலை இலக்கிய அமைப்புகளும் ஸ்தாபனரீதியாக பாரிய பங்களிப்பை வழங்கியுள்ளன.

குறிப்பாக இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் பல நல்ல எழுத்தாளர்களை உருவாக்கியது. நூற்றுக்கும் மேற்பட்ட சிறுகதை – நாவல் எழுத்தாளர்களையும், கவிஞர்களையும் முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தனது இலக்கியப் பண்ணையில் நாற்றிட்டு வளர்த்தது. அந்த எழுத்தாளர்கள் அதுவரை காலமும் ஈழத்து எழுத்துலகில் ஜம்பவான்களாக வலம் வந்து கொண்டிருந்த பண்டிதத்தனமான, பிற்போக்குப் பழமைவாதம் பேணிய (நிலப்புரபுத்துவ சிந்தனைகளையும், சாதி மனோபாவத்தையும் பேணிய) ஆதிக்க மனோபாவம் கொண்ட எழுத்தாளர்களின் ஏகபோகத்தைத் தகர்த்து எறிந்தனர். அவர்கள் கலை இலக்கியத்தை பிற்போக்கு சமூக அமைப்பைப் பேணுகின்ற, பத்தாம் பசலித்தனமான பொழுதுபோக்கு விடயம் என்ற நிலையிலிருந்து மீட்டு, அதை மக்களின் வாழ்வுடன் சம்பந்தப்பட்ட ஒன்றாக, அவர்களது வாழ்க்கைப் போராட்டத்துக்கான ஆயுதமாக மாற்றினர்.

தமிழகத்தில் இல்லாத அளவுக்கு இலங்கையில் முற்போக்கு இலக்கியம் வளர்ந்ததிற்கு, இங்குள்ள பருண்மையான நிலமைகளுடன் முற்போக்கு எழுத்தாளர்கள் தமது பேனாவை இணைத்ததுதான் பிரதான காரணம் எனலாம். தமிழகத்தில் ஒரு கட்டத்தில் பெரும் செல்வாக்கு வகித்த முற்போக்கு இலக்கியம், திராவிடக் கட்சிகளின் வருகையினாலும், அவை சக்திவாய்ந்த சினிமாவை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தியதாலும், பெரும் பின்னடைவைச் சந்தித்தது. ஆனால் இலங்கையில் 1950களின் நடுக்கூற்றில் தமிழரசுக்கட்சி பெரும் எழுச்சியுடன் மொழி – இன அடிப்படையிலான அரசியலை முன்னெடுத்த போதிலும், முற்போக்கு இலக்கியத்தின் தனித்துவமான வளர்ச்சியை அதனால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

அதற்கான காரணம், இலங்கை முற்போக்கு இலக்கிய இயக்கம் வெறுமனே முதலாளி – தொழிலாளி வர்க்க இலக்கியம் பற்றி மட்டும் பேசவில்லை. அது இலங்கை தமிழ் சமூகம் எதிர்நோக்கிய பிரச்சினைகளை காலத்துக்காலம் சரியாகப் பிரதிபலித்து வளர்ந்த ஒன்றாகும். அந்த வகையில் முற்போக்கு எழுத்தாளர்களின் ஆக்க இலக்கியங்களை எடுத்து நோக்கினோமென்றால், அவை மண் வாசனை இலக்கியம், தேசிய இலக்கியம், தொழிலாள வர்க்க இலக்கியம், சாதிய ஒடுக்குமுறைக்கெதிரான இலக்கியம், தேசிய ஒடுக்குமுறைக்கெதிரான இலக்கியம் என, பல உள்கிடக்கைகளைத் தன்னுள் கொண்டுள்ளதை அவதானிக்க முடியும். அத்துடன் தமிழிலக்கியத்துறையில் உலகின் மிகச் சிறந்த முற்போக்கு இலக்கிய விமர்சகரான பேராசிரியர் க.கைலாசபதி போன்றவர்களின் வழிகாட்டுதலும் கிடைந்தமை இலங்கை முற்போக்கு இலக்கிய அணிக்குக் கிடைத்த பெரும் வரப்பிரசாமாகும்.

ஆனால் இன்று இந்த வரலாறெல்லாம் கடந்தகால நினைவுகளாக மட்டுமே எஞ்சியுள்ளன. 1970களில் பிற்போக்கு தமிழ் அரசியல் தலைமைகளால் தமிழ் சமூகத்தில் வன்முறை அரசியல் தூண்டப்பட்ட பின்னர், முற்போக்கு இலக்கியத்துக்கு மட்டுமின்றி. பொதுவாக ஈழத்து இலக்கியத் துறைக்கே பெரும் வீழ்ச்சி ஆரம்பமாகிவிட்டது. இந்த வன்முறையும் அராஜகப் போக்கும், 1977இல் ஜே.ஆர்.ஜெயவர்தனவின் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிபீடம் ஏறி தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை ஆரம்பித்த பின்னரும், அவரது ஆட்சி திறந்த பொருளாதாரக் கொள்கையை அறிமுகப்படுத்திய பின்னரும், மேலும் மோசமான கட்டத்தை அடைந்தது.

அரச பயங்கரவாதத்தின் விளைவாகத் தோன்றிய 'விடுதலை'ப் (புலி) பயங்கரவாதம் தமிழ் மக்களது வாழ்க்கையின் அனைத்துத்துறைகளையும் துவம்சம் செய்தது. அதில் முக்கியமான ஒன்று அந்த புலி பயங்கரவாதம் தமிழ் இலக்கியத்தின் குரல்வளையை நெரித்ததாகும். அது ஒரு பக்கத்தில் தமிழ் இனம், மொழி, கலாச்சாரம் என்று சொல்லிக்கொண்டு, மறுபக்கத்தில் எழுத்தாளர்களின் உயிரிலும் மேலான சுதந்திரமான சிந்தனைகளையும், ஆக்க முயற்சிகளையும் குழி தோண்டிப் புதைத்தது.

எழுத்தாளர்கள் ஏதாவது எழுதுவது என்றால், புலிகளையும் அவர்களது போர் நடவடிக்கைகளையும் புகழ்ந்து மட்டுமே எழுத வேண்டும் என்ற, எழுதப்படாத விதியை புலிகள் நடைமுறைப்படுத்தினார்கள். முற்போக்கு இலக்கிய சஞ்சிகைகளை வெளியிட முடியாமல் தடை பண்ணினார்கள். யாழ்ப்பாணத்தில் பல வருடங்களாக முற்போக்கு இலக்கிய வெளியீடுகளை விற்பனை செய்து வந்த புத்தக நிலையங்களை மூட வைத்தார்கள். முற்போக்கு வெளியீடுகளை அச்சிட்ட அச்சகங்களை அபகரித்தார்கள். தென் இந்தியாவிலிருந்து வந்து கொண்டிருந்த சாதாரண முதலாளித்துவப் பத்திரிகைககளையும், கொழும்பிலிருந்து வந்த பத்திரிகைகளையும் கூட தடை செய்தார்கள். பொதுமக்களின் ரசனைப் பொருளான சினிமாவையும்கூட தடை செய்தார்கள்.

புலிகளது இந்த பாசிஸ வகையிலான

நடவடிக்கைகளை தமிழ் சமூகத்தின் எழுத்தாளர்களும், புலமைசார் சமூகம் என அழைக்கப்படுபவர்களும் கைகட்டி மௌனமாகப் பார்த்து வாளாவிருந்தனர். 1970 – 77 காலகட்டத்தில் இலங்கையில் உள்ள எழுத்தாளர்களின் படைப்புகளை மக்கள் ஆதரிக்கும் ஒரு சூழலை உருவாக்குவதற்காக சில தென்னிந்திய நாலாம்தர சஞ்சிகைகளுக்கு அன்றைய அரசாங்கம் தடை விதித்ததை ஏற்க முடியாமல் கூச்சல் போட்ட தமிழ் தேசியவாதிகள், புலிகள் தமிழ் சமூகத்தின் கலாச்சார, அறிவியல், ஆன்மீகத் துறையை ஒட்டுமொத்தமாக காலில் போட்டு மிதித்தது சம்பந்தமாக ஒரு வார்த்தை தன்னும் சொல்லவில்லை.

பல வருடங்களாக யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்டு வந்த 'கம்பன் விழா'வைப் புலிகள் தடைசெய்த பொழுது எந்தவொரு இலக்கியவாதியும் அதற்கெதிராகக் குரல் எழுப்பவில்லை. புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக அந்தக் கம்பன் விழாவின் ஏற்பாட்டாளர் 'கம்பவாரிதி' என அழைக்கப்படும் இ.ஜெயராஜ் யாழ்ப்பாணத்தை விட்டு ஓடி கொழும்பில் வாழவேண்டிய நிலை ஏற்பட்டது.

புலிகள் மேற்கொண்ட சுதந்திரமான தமிழிலக்கியத்தின் மீதான தடையால் சுமார் 30 ஆண்டு காலம் ஈழத் தமிழ் மண்ணிலிருந்து எந்தவொரு தமிழ் இலக்கிய புஸ்பங்களும் மலர முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுவிட்டது. தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இந்த இழப்பு சிங்கள மக்களுக்கு ஏற்படவில்லை. ஏன் முஸ்லீம் மக்கள் மற்றும் மலையகத் தமிழ் மக்களுக்கும்கூட ஏற்படவில்லை. அவர்கள் தமக்கிருந்த ஜனநாயக இடைவெளிகளினூடே தமது கலை இலக்கிய செயற்பாடுகளை மேற்கொண்டு வந்துள்ளனர்.

இன்று போர் முடிந்துவிட்டது. நான்கு ஆண்டுகள கழிந்தும் விட்டன. ஆனால் புலிகளால் பட்ட மரமாக்கப்பட்ட அல்லது குளிர் நாடுகளிலுள்ள மரங்கள் உறைபனி காலத்தில் இருப்பது போன்ற உறங்கு நிலைக்குத் தள்ளப்பட்ட ஈழத்து தமிழ் எழுத்தாளர்கள் இன்னமும் விழித்தெழவில்லை. அவர்களில் ஒரு பகுதி முதிய தலைமுறையினர் மரணித்துவிட்டனர். பலர் நாட்டைவிட்டு வெளியேறிவிட்டனர். எஞ்சியிருப்பவர்களில் சிலர் தமிழ் பகுதிகளைவிட்டு வெளியேறி நாட்டின் இதர பகுதிகளில் வாழ்கின்றனர். இளைய சந்ததியை முதலாளித்துவ நுகர்வுக் கலாச்சாரமும், கணனி யுகமும் கட்டிப் போட்டுள்ளன.

இவையெல்லாம் இருந்தாலும், இலங்கைத் தமிழ் மக்களின் கலாச்சாரத் தளத்தில் நிரப்பப்பட வேண்டிய இடம் வெற்றிடமாகவே உள்ளது. அதற்கான தேவையும் உள்ளது. தமிழகத்தில் இதுபோன்ற முதலாளித்துவ நுகர்வுக் கலாச்சாரமும், கணனி ஆதிக்கமும் இருந்தாலும், அங்கு புலிகள் இயக்கம் போன்ற அராஜக சக்திகளின் ஆதிக்கம் கோலோச்சாததால், முற்போக்கு இலக்கிய இயக்கத்தினதும், பொதுவாக தமிழ் இலக்கியத்தினதும் சுதந்திரமான வளர்ச்சி தங்குதடையின்றி நடைபெறுகின்றது. ஆனால் ஈழத்திலோ கடந்த 30 வருடங்களாக குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய எழுத்தாளர்கள் உருவாகவில்லை. நல்ல கலை இலக்கிய சஞ்சிகைகள் வெளிவருவதில்லை. நல்ல புத்தகங்கள்கூட வெளிவரவில்லை.

புலிகளின் காலத்தில் வரட்டுத்தனமான கலாச்சார தனித்துவம் பற்றி உரக்கக் கதைத்துக்கொண்டு கதவுகளை இறுக மூடியவர்கள், இன்று தென்னிந்திய குப்பை சினிமாவையும், சின்னத்திரை நாடகங்களையும் தமது கலாச்சாரப் பொக்கிஸங்களாக வரித்துக் கொண்டுள்ளனர். புலம்பெயர் நாடுகளிலுள்ள தமிழ் மக்கள் வாழ்வில் கலாச்சாரம் என்பது கலியாண வீடு. பூப்புனித நீராட்டு, பிறந்தநாள் கொண்டாட்டம் என்பவற்றுடன் தமிழக சினிமாவும் என்றாகிவிட்டது. புலம்பெயர் புலிகள் இன்னுமொருபடி மேலேபோய், தென்னிந்திய குப்பை சினிமாக்களில் முதலீடு செய்வது, தமிழ் திரைப்பட நடிகர் நடிகைகளைக் கூப்பிட்டு விழாக்கள் நடாத்தி பணம் பண்ணுவது என்ற வியாபார விடயமாகிவிட்டார்கள்.

இந்த சூழ்நிலையில், தாயகத்தில் வாழும் எஞ்சியுள்ள முற்போக்கு எழுத்தாளர்களும், புலம்பெயர் நாடுகளிலுள்ள முற்போக்கு சிந்தனையாளர்களும் முன்முயற்சி எடுத்து ஈழத்து தமிழ் கலை இலக்கியத் துறையில் மீண்டும் ஒரு மறுமலர்ச்சியைக் கொண்டு வரவேண்டிய வரலாற்றுப்பணியைச் செய்ய வேண்டும். 30 வருடப் போராலும், துரதிஸ்டவசமாக கைலாசபதி போன்றவர்கள் காலத்துக்கு முந்தி மரணித்துவிட்டதனாலும் தேங்கிப்போய் உள்ள தமிழ் இலக்கிய நீரோட்டத்தின் பழைய வாய்க்கால்களைச் செப்பனிட்டும், புதுப்புது கால்வாய்களைத் திறந்தும் மீண்டும் புத்தெழுச்சியுடன் ஓட வைக்க வேண்டும்.

மனித வாழ்வு என்பது இயற்கையாகவும், யதார்த்தமாகவும் நடைபெறுவது. தன்னியல்பாக நிகழும் அதை நெறிப்படுத்தி, ஆரோக்கியமானதாக, அழகானதாக ஆக்குவது அரசியலும் இலக்கியமும்தான். அதிலும் இலக்கியத்தின் பங்களிப்பு ஒவ்வொரு மனிதனது வாழ்விலும் இரண்டறக் கலந்தது. எனவே அந்த உன்னத நிலையை மீண்டும் உருவாக்குவதற்காக முற்போக்கு எழுத்தாளர்கள், கலைஞர்கள் உட்பட புதிய கலை இலக்கியப் பரம்பரையை மீண்டும் உருவாக்குவது காலத்தின் தேவையாகும். *

## வானவில் இதழ் 31, ஆடி 2013

**ஆடி மாதத்திற்குரிய இவ்விதழ், தவிர்க்க முடியாத காரணங்களினால் ஏறத்தாள ஒரு மாதத்தின் பின்னரே வெளியிடப்படுகின்றது என்பதனை வானவில் வாசகர்கள் கவனத்தில் கொள்ளவும்.**

# 13ஆவது திருத்தத்தை எதிர்ப்பவர்கள் தேசியவாதிகளல்ல, பேரினவாதிகள்!

## அமைச்சர் ராஜித சேனரத்ன

**இனப்பிரச்சினை தீர்வு சம்பந்தமாக கொழும்பு ஆங்கில ஊடகமொன்றுக்கு மீன்பிடி மற்றும் நீரியல் வள அபிவிருத்தி அமைச்சர் டொக்டர் ராஜித சேனரத்ன (Dr.Nambukara Helambage Rajitha Harischandra Senaratne) அளித்த பேட்டியின் முக்கியமான சில பகுதிகள் கீழே தரப்படுகிறது:**



***கேள்வி :*** 13ஆவது திருத்தச்சட்டத்தை நீர்த்துப் போகச் செய்வதற்கு ஆதரவாக சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் உத்தியோகபூர்வ நிலைப்பாடு உள்ளதாக செய்திகள் வரும் சூழலில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சில பிரிவுகள் அச்சட்டத்தையே இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவான நீங்கள் இந்த நிலைமை குறித்து என்ன கருதுகிறீர்கள்?

***பதில் :*** இந்த நிலைமை குறித்து நான் மகிழ்ச்சி அற்றவனாக உள்ளேன். அதற்கான ஒரே காரணம் என் வாழ்நாளில் இனப்பிரச்சினைக்கு ஒரு அரசியல் தீர்வு காண்பதற்கு என்னை அர்ப்பணிக்க முடியாமல் இருப்பதுதான். 13A சட்டம் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான ஆகச் சிறந்த ஒரு தீர்வல்ல. ஆனால் தற்போதுள்ள சூழ்நிலையில் இதுதான் நல்லதொரு தீர்வாகும். அதேநேரத்தில் இந்தத் தீர்வு சுலபமாக நடைமுறைப்படுத்தப்படக்கூடிய ஒன்றுமாகும். எமது நாட்டின் வளர்ச்சியைப் பொறுத்த வரையிலும், ஏனைய பல நாடுகளைப் பொறுத்த வரையிலும்கூட உள்ள பிரதான பிரச்சினை என்னவென்றால், இனங்களுக்கிடையிலான புரிந்துணர்வற்ற தன்மையாகும். கடந்த காலங்களில் ஒவ்வொரு நாடும் செழிப்புடன் இருந்ததிற்கான காரணம், அந்த நாடுகள் தமது உள்நாட்டுப் பிரச்சினைகளைத் தாமே தீர்த்துக் கொண்டமையாகும். எமது ஜனாதிபதி இந்த நாட்டை 'ஆசியாவின் அதிசயமாக' மாற்ற விரும்புகிறார். ஆனால் அதை அடைவதானால், எமக்கு அரசியல் ஸ்திரத்தன்மை தேவையாக இருப்பதுடன், இனங்களுக்கிடையிலான தவறான புரிந்துணர்வு களையப்பட்டு, நாம் எல்லோரும் இலங்கையர்கள் என்ற அடையாளம் உருவாக்கப்பட வேண்டும். கடைகோடித் தீவிரவாதிகள் இதைப் புரிந்து கொள்ளமாட்டார்கள். ஏனெனில் அவர்கள் ஒரு 'தீவு மனப்பான்மை'யில் இருக்கின்றனர். நாம் இந்தத் தீவு மனப்பான்மையைத் தூக்கி எறிய வேண்டும். ஏனெனில் இன்றைய உலகு ஒரு பூகோளமயப்பட்ட உலகாக இருக்கின்றது. இந்தப் பிரச்சினைகளுக்கான தீர்வு அதிகாரப் பகிர்வேயாகும். இந்தப் பிரச்சினையை அடுத்த சந்ததிக்கும் நாம் கைமாற்றி விடக்கூடாது. நாம் இதைத் தீர்த்து வைத்து நாட்டை ஐக்கியப்படுத்த வேண்டும்.

***கேள்வி :*** ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ அண்மையில் கூறும்போது, 13A சட்டம் சம்பந்தமாக தனிப்பட்ட முறையில் வெவ்வேறு கண்ணோட்டங்கள் இருப்பதாகவும், சிறீலங்கா சுதந்திரக் கட்சி நிச்சயமாக ஒருமனதான கண்ணோட்டத்தைக் கொண்டிருக்க வேண்டுமெனவும் கூறியுள்ளார். அத்துடன் அமைச்சர்கள் தமது தனிப்பட்ட கருத்துக்களை ஊடகங்களுக்குத் தெரிவிக்கக்கூடாது எனவும் அறிவுறுத்தியுள்ளார். 13A சம்பந்தமாக மாறுபாடான கருத்து இருப்பதை ஜனாதிபதி ஒடுக்க நினைக்கிறார் என்ற விமர்சனம் இது பற்றி இருக்கிறது. இது சரியா?

***பதில் :*** எப்பொழுது நீங்கள் ஒரு கட்சியின் உறுப்பினராகிறீர்களோ, அப்பொழுது சில குறிப்பிட்ட ஒழுங்கு விதிகளுக்கு உள்ளாகிறீர்கள். அது உண்மை. நாம் எமது கருத்துகளை வெளியிடுவதுடன், நான் எனது கொள்கைகளுக்காகவும் நிற்கின்றேன். ஜனாதிபதி நாம் இதைப் பகிரங்கமாகச் செய்வதை விரும்பவில்லை. ஏனெனில் இந்த விவகாரம் சம்பந்தமாக சில கட்சிகள் கூட்டங்களையும் நடாத்தியுள்ளன. ஜனாதிபதியைப் பொறுத்த வரையில் இது சரியானதாகும். ஏனெனில் இந்த விடயத்துக்கு சிபார்சுகள் செய்வதற்காக ஏற்கெனவே பாராளுமன்ற தெரிவுக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

***கேள்வி :*** 13A சட்டத்தை ஒழிக்கக் கோரும் தேசியவாதக் குழுக்கள் அதற்காகக் கூறும் காரணமாக, வட மாகாணசபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றால், நாட்டின் தேசிய பாதுகாப்பு அபாயத்திற்கு உள்ளாகி விடும் என்று கூறுகிறார்கள். அவர்களது வாதம் சரியானதுதானா?

***பதில் :*** முதலாவதாக, இந்தக் குழுக்கள் தேசியவாதிகளல்ல. அவர்கள் பேரினவாதிகள். தேசியவாதம் என்பதன் அர்த்தம், ஒருவரது தேசிய அடையாளத்தைப் பாதுகாப்பதும், நாட்டின் முன்னேற்றத்திற்குப் பங்களிப்பு வழங்குவதுமாகும். சொந்த நாட்டுக்குள்ளேயே இன்னொரு இனத்தைக் கொடுமைப் படுத்துபவர்களை தேசியவாதிகள் என அழைக்க முடியாது, அவர்கள் பேரினவாதிகள். இந்தப் பேரினவாதிகள் ஒன்றும் புதிய குழுவினர் அல்ல. இவர்கள் 50கள் முதல் இருந்து வருகின்றனர். அத்துடன் இந்த பேரினவாதக் கும்பல் ஒரே வாக்கு வங்கிக்காகப் போட்டியிடுகின்றனர். எனவே ஒரு குழு கூடுதலான பிரபல்யம் அடைந்தால், மற்றக் குழு அதைவிடக் கூடுதலாகச் செல்வாக்குப் பெறுவதற்காக மேலும் கூடுதலான பேரினவாத நடவடிக்கைகளில் ஈடுபடும். இது ஒரு கடைகோடி பேரினவாதிகளுக்கிடையிலான சண்டையாகும். இந்தப் பதவிப் போராட்டத்தால் நாட்டின் விதியை மாற்றிவிட முடியாது.

***கேள்வி :*** தேசிய சுதந்திர முன்னணியும், ஜாதிக ஹெல உருமயவும் சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் உள்ள 13A சட்டத்துக்கு ஆதரவான குரலை இல்லாமல் செய்துவிட முயல்கின்றன என்று கூறப்படுகின்றது. இது சரியானதுதானா?

***பதில் :*** இந்தக் குழுக்கள் 13A சட்டத்துக்கு எதிராக இருப்பது தங்களது சொந்தப் பிரச்சினைகளுக்காகவே ஒழிய வேறொன்றுக்காகவும் அல்ல. அவர்கள் விரும்புவதெல்லாம் ஜனாதிபதிக்கும், அரசாங்கத்திற்கும் பிரச்சினைகளை உருவாக்குவதே. ஜனாதிபதி இது சம்பந்தமாக கவனமாக இருக்கிறார். கடந்த காலங்களில் செய்தது போலவே வருங்காலத்திலும் அவர் சரியான வழியில் செயல்படுவார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

***கேள்வி :*** உங்களது அபிப்பிராயத்தில், இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சிறந்த அதிகாரப் பகிர்வு மாதிரி என்ன?

***பதில் :*** தற்போதைய நிலையில், 13ஆவது திருத்தமே அதிகாரப் பகிர்வுக்கான சிறந்த மாதிரியாகும். ஏனெனில் இது ஒற்றையாட்சி என்ற குடையின் கீழ் உள்ளது. எப்படியிருந்தாலும், அதிகாரங்கள் பகிரப்பட்டாலும், இறுதிக் கட்டுப்பாட்டு அதிகாரம் ஜனாதிபதியிடமே இருக்கும். அதிகாரத்தைப் பங்கிடுவது சம்பந்தமாக நிலவும் பயங்கள் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். இதுபோன்ற ஒரு பயம் 50களிலும் இருந்தது. அப்பொழுது தமிழ்மொழியை உத்தியோகபூர்வ மொழி ஆக்கினால், சிங்கள மொழிக்குப் பாதிப்பு ஏற்படும் என்று கருதப்பட்டது. இது 1956இல் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க சிங்களம் மட்டும் என்ற கொள்கையை அறிமுகப்படுத்தும் நிலைக்கு இட்டுச் சென்றது. எப்படியிருந்த போதிலும் 13A சட்டத்தில் உள்ள சிங்களமும் தமிழும் உத்தியோகபூர்வ மொழிகள் என்ற சரத்து 90கள் வரை அமுல் செய்யப்படவில்லை. கடைசியாக பண்டாரநாயக்கவின் மகள் சந்திரிகா இந்தச் சரத்தை அமுல்படுத்தியதைப் பார்த்தோம். தமிழை உத்தியோகபூர்வ மொழியாக ஆக்கியதால், சிங்கள மொழியின் அந்தஸ்துக்கு ஒருபோதும் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை. அது போன்றதொரு நிலைமையையே இப்பொழுதும் நாம் கொண்டுள்ளோம். மத்தியிலுள்ள சில அதிகாரங்களைப் பங்கிடுவதால், சிங்களப் பெரும்பான்மை இனத்துக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படப் போவதில்லை.

***கேள்வி :*** தேசிய சுதந்திர முன்னணி போன்ற குழுக்கள் எடுக்கும் நிலைப்பாடு, ஜனாதிபதியின் உத்தியோகபூர்வமற்ற நிலையைப் பிரதிபலிப்பதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஜனாதிபதி

தனிப்பட்ட முறையில் 13A சட்டத்தை எதிர்க்கின்றாரா?

***பதில் :*** ஜனாதிபதி மிகவும் காரியார்த்தவாதி (Practical Person) . ஆனால் அவர் எல்லாப் பக்கங்களிலிருந்தும் அழுத்தங்களுக்கு உள்ளாகிறார். சாத்தியான எல்லா கண்ணோட்டங்களையும் அவர் பரிசீலிப்பார். ஆனால் நாட்டின் நலன்களுக்குச் சிறப்பானதொரு இறுதி முடிவை அவர் எடுப்பார் என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு.

***கேள்வி :*** சில வேளைகளில் 13A சட்டம் சாரமற்றதாக்கப்பட்டு அல்லது முற்றாக இல்லாதொழிக்கப்பட்டால், நீங்கள் அரசாங்கத்துடன் தொடர்ந்தும் இருப்பீர்களா?

***பதில் :*** 13A சட்டம் சாரமற்றதாக்கப்பட்டால், அத்துடன் அரசாங்கம் முடிவுக்கு வந்துவிடும். எனவே அதிலிருந்து வெளியேறும் தேவை எமக்கேற்படாது. அரசாங்கம் தானாகவே அதிகாரத்திலிருந்து அகன்று விடும்.

***கேள்வி :*** கடந்த காலங்களில் '13இற்கும் அப்பால்' என வாக்குறுதி அளித்த ஜனாதிபதி, இப்பொழுது '13இற்கும் குறைவாக' என்ற நிலைப்பாட்டில் இருக்கிறார். ஏன் இந்த மாற்றம்?

***பதில் :*** அதிகாரப் பகிர்வு சம்பந்தமாக பாராளுமன்ற தெரிவுக் குழு தீர்மானிக்கட்டும் என்பதே ஜனாதிபதியின் நிலைப்பாடு. அவர் காணி அல்லது பொலிஸ் அதிகாரங்களில் கை வைக்கவில்லை. பாராளுமன்ற தெரிவுக் குழுவின் எந்தவொரு தீர்மானத்தையும் தான் நடைமுறைப்படுத்துவதாக அவர் ஏற்றுக் கொண்டுள்ளார். டியூ குணசேகர, வாசுதேவ நாணயக்கார ஆகியோருடனான சந்திப்பின் போது, சர்வ கட்சி பிரதிநிதிகள் குழுவின் பரிந்துரைகளைக் கூட, பாராளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு எடுத்து வருவதை ஜனாதிபதி ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

***கேள்வி :*** 13A மீதான மிகைப்படுத்தலுக்குக் காரணம், வட மாகாணசபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்று விடும் என்ற அரசாங்கத்தின் கவலை காரணமா?

***பதில் :*** தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றால்கூட, நாம் கவலைப்பட வேண்டிய தேவை இல்லை. அது எமது நாடு சுதந்திரமானதும், நீதியானதுமான தேர்தலை நடாத்துகின்ற நாடு என்பதை எடுத்துக் காட்டும். தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெறுமானால், நாம் உண்மையான ஜனநாயகத்தைக் கொண்டுள்ளவர்கள் என்பதை ஜனாதிபதி நிரூபிக்க முடியும். அதன் பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எப்படி மத்திய அரசாங்கத்துடன் இணைந்து வேலை செய்கின்றது என்பதை அறிய முடியும். அத்துடன் தேசிய இனங்களின் இணக்கப்பாடு பற்றிய ஒரு பலமான செய்தியை நாம் பேரினவாதிகளுக்கும் அனுப்ப முடியும்.

***கேள்வி :*** வட மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னர் 13A சட்டத்தில் ஏதாவது திருத்தங்கள் செய்யப்படுமா?

***பதில்:*** இல்லை

## பேட்டி கண்டவர்: சச்சின் பரதலிங்கம்

**தமிழில்: சுலோசனா**

5ம் பக்கத்தொடர்ச்சி...

ஆனால் 1967 திராவிட முன்னேற்றக் கழகம் முதன்முதலாக ஆட்சிபீடம் ஏறிய நாளிலிருந்து, அந்த உன்னத பண்பாடுகள் தமிழகத்தை ஆண்டு வரும் இரண்டு திராவிடக் கழகங்களாலும் சீரழிக்கப்பட்டுவிட்டது.


மேற்கு வங்கம் வரலாற்று ரீதியாகவே புரட்சிகர அரசியல், இலக்கிய செயற்பாடுகளுக்கு பெயர்பெற்ற மாநிலம். அந்த மரபை பெருங்கவி ரவீந்திரநாத் தாகூர் போன்றவர்கள் மேலும் வளர்த்து எடுத்தனர். அதைப் பின்னர் அந்த மாநிலத்தைப் பல்லாண்டுகள் ஆட்சி செய்த மார்க்சிஸ்ட்டுகள் மேலும் மேலும் வளர்த்தனர். இந்த கட்டுரையில் ஓரிடத்தில் குறிப்பிடப்படும் காலஞ்சென்ற மேற்கு வங்க முதலமைச்சரும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவரும், மேற்கு வங்க மக்களின் அபிமானம் பெற்ற தலைவுரமான தோழர் ஜோதிபாசு வாழும் இடத்தை வைத்தே மேற்கு வங்கத்தில் மார்க்சிஸ்ட்டுகள் உருவாக்கியுள்ள மக்கள் கலாச்சாரத்தைப் புரிந்து கொள்ள முடியும்) *

**"மார்க்சின் தத்துவத்தை நாங்கள் முற்றும் முடிவான ஒன்றாக, மீறவொண்ணாத ஒன்றாகக் கருதவில்லை. மாறாக, அது சோசலிஸ்ட்டுகளுக்கு உரித்தான விஞ்ஞானத்தின் அடிக்கல்லை மட்டுமே அமைத்துக் கொடுத்திருக்கிறது. சோசலிஸ்ட்டுகள் வாழ்க்கையுடன் சேர்ந்து நடைபோட விரும்பினால், இந்த விஞ்ஞானத்தை எல்லாத் திசைகளிலும் வளர்த்துச் செல்வது அவசியம் என்பதை நாம் ஐயமற அறிவோம்."**

– லெனின் 'நமது வேலைத்திட்டம்' என்ற கட்டுரையில்

13ஆவது திருத்தச் சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்ற கருத்து அரசாங்கத்தின் சில தரப்புகளிடையே நிலவுகின்றது. அரசாங்கத் தலைமையும் அவ்வாறான ஒரு கருத்தில் இருப்பதை அவதானிக்க முடிகிறது.

13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும் அல்லது அதில் முக்கிய திருத்தங்கள் செய்யப்பட வேண்டும் என்ற கருத்து முன்னரும் இருந்துவந்த போதிலும், வட மாகாணசபைத் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் தான் அது தீவிரமடைந்தது. அதற்கான காரணம் வட மாகாணசபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றி பெற்றால், அது நாட்டின் தேசிய நலன்களுக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்தாக முடிந்துவிடும் என்ற அச்சம் சில தரப்புகளிடையே ஏற்பட்டதாலாகும்.




# 13ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்கள் செய்வது அவசியம் தானா?

சில தீவிரமான சிங்கள இனவாத சக்திகள் ஒருபடி மேலேபோய், வட மாகாணசபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வெற்றிபெற்றால், அது நாட்டில் மீண்டும் பிரிவினைக்கு வழிவகுத்துவிடும் என்றுகூட பிரச்சாரம் செய்து வருகின்றன. எனவே அவை வட மாகாணசபைத் தேர்தலை நடாத்தக்கூடாது என்றும், 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக இல்லாமல் செய்துவிட வேண்டும் என்றும் கோரி வருகின்றன.

இன்னொரு பக்கத்தில் 13ஆவது திருத்தச் சட்டத்தில் எவ்வித திருத்தங்களும் மேற்கொள்ளாமல் அதை அப்படியே அமுல்படுத்த வேண்டும் என அரசாங்கத்திற்கு உள்ளேயும் வெளியேயும் உள்ள பிறிதொரு பிரிவினர் வலியுறுத்தி வருகின்றனர். 13ஆவது திருத்தச் சட்டத்தைக் கொண்டு வந்த இந்திய – இலங்கை ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட இந்தியாவும் அதை அப்படியே அமுல் செய்ய வேண்டும் என்ற கருத்தையே கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இவ்வாறு ஏட்டிக்குப் போட்டியான கருத்துகள் வெளியிடப்பட்டாலும், இலங்கை அரசு இவ்விடயத்தில் என்ன செய்ய வேண்டும் என்ற கருத்து முக்கியமானது.

முதலாவதும் முக்கியமானதுமான விடயம், எந்தக் காரணத்தைக் கொண்டும் 13ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு நீக்கக்கூடாது என்பதாகும்.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக இதுவரை 3 ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. முதலாவது ஒப்பந்தம் 1957இல் அப்போதைய பிரதமர் எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கவுக்கும், தமிழரசுக் கட்சித் தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்திற்கும் இடையில் செய்யப்பட்டது. இதன் அடிப்படையில் வடக்கு கிழக்கில் 'பிராந்திய சபைகள்' அமைக்கப்படும் எனச் சொல்லப்பட்டது. ஆனால் அதை அமுல்படுத்தவிடாமல் நாடு இரண்டாகப் பிரிந்து விடும் என ஐக்கிய தேசியக் கட்சி குழப்பங்களை ஏற்படுத்தியதால், அது கிழித்தெறியப்பட்டது.

**களனிப்பிரியன்**

இரண்டாவது ஒப்பந்தம் 1965இல் அப்போதைய பிரதமர் டட்லி சேனநாயக்கவுக்கும் தமிழரசுக் கட்சித் தலைவர் செல்வநாயகத்துக்கும் இடையில் ஏற்பட்டது. அந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் வடக்கு கிழக்கில் 'மாவட்ட சபைகள்' ஏற்படுத்தப்படும் எனக் கூறப்பட்டது. ஆனால் டட்லி சேனநாயக்கவின் ஐ.தே.க அரசு (இதில் தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளும் அங்கம் வகித்தன) நாலரை ஆண்டுகள் இழுத்தடித்துவிட்டு, இறுதியில் ஒப்பந்தத்தை அமுல்படுத்தாமல் ஏமாற்றிவிட்டது.

இந்தப் பின்னணியில் 1977இல் ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையில் ஐ.தே.க அரசு ஏற்பட்ட பின்னர், அவ்வரசு தமிழ் மக்களுக்கு எதிராகக் கடுமையான அடக்குமுறைகளை மேற்கொண்டதால், தமிழ் இளைஞர்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட ஆரம்பித்தனர். அந்த ஆயுதப் போராட்டம் தீவிரமடைந்த ஒரு கட்டத்தில்தான், இந்தியா தலையிட்டு, இந்திய – இலங்கை ஒப்பந்தம் ஒன்றைக் கைச்சாத்திட்டது. அதன் மூலமாக 13ஆவது திருத்தச் சட்டம் உருவாக்கப்பட்டு, அதன் அடிப்படையிலேயே மாகாணசபைகள் செயற்பட ஆரம்பித்தன.

இதில் முக்கியமான ஒரு விடயம் என்னவெனில், தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக செய்யப்பட்ட இந்த மூன்று ஒப்பந்தங்களும் அவ்வவ்போது பதவியில் இருந்த அரசாங்கங்களினால் செய்யப்பட்டனவேயொழிய, பிரதான எதிர்க்கட்சியோ அல்லது ஏனைய முக்கியமான அரசியல் கட்சிகளோ இந்த ஒப்பந்தங்களில் சம்பந்தமாகக் கலந்தாலோசிக்கப்படவில்லை. அதுவும் இந்த ஒப்பந்தங்கள் அமுல்செய்யப்பட முடியாமல் போய்விட்டதற்கு ஒரு காரணமாகும்.

எதுஎப்படியிருந்த போதிலும், 13ஆவது திருத்தச் சட்டத்தை உருவாக்குவதில் அயல்நாடான சக்திவாய்ந்த இந்தியா சம்பந்தப்பட்டு இருப்பதாலும், தமிழ் மக்களுக்கு அது பல வழிகளில் நன்மை பயக்கக்கூடியது என்பது நடைமுறையில் நிருபிக்கப்பட்டுள்ளதாலும், அந்தச் சட்டத்தின் பிரகாரம் அமைக்கப்பட்ட மாகாணசபைகள் நாடு முழுவதும் அமைக்கப்பட்டதுடன், ஓரளவு நாட்டு மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாக இருப்பதாலும், அதைப் பாதுகாக்க வேண்டியது தமிழ் மக்களைப் பொறுத்தவரை மிக முக்கியமாகும். ஆனால் வடக்கு கிழக்கு இணைந்த மாகாணசபையையே, புலிகளின் அதிகார வெறியாலும், முட்டாள்தனத்தாலும் தமிழ் மக்கள் இழக்க வேண்டி ஏற்பட்டது என்பதையும், இந்தச் சந்தர்ப்பத்தில் வருத்தத்துடன் இந்தக் கட்டத்தில் நினைவுகூர வேண்டி உள்ளது.

இப்பொழுது உள்ள நிலைமையை எடுத்துப் பார்த்தால், 13ஆவது திருத்தச் சட்டத்தை முற்றாக இல்லாமல் ஒழிப்பது என்பது இலங்கை அரசாங்கத்தால் இயலாதது என்பது தெளிவாகிவிட்டது. ஆனால் அதற்கு பாராளுமன்றத்தில் உள்ள மூன்றிலிரண்டு பெரும்பான்மையை வைத்து திருத்தங்கள் செய்ய முடியும். அவ்வாறான திருத்தங்கள் தேவையா என்பதே இப்பொழுதுள்ள கேள்வியாகும்.

இந்திய – இலங்கை ஒப்பந்தம் செய்யப்பட்ட வேளையில், அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவரது தேவையற்ற நடவடிக்கைகள் காரணமாக மிகவும் பலவீனமான நிலையில் இருந்ததால், அவசரம் அவசரமாகச் செய்யப்பட்ட அந்த ஒப்பந்தத்தில் இந்தியாவின் கையே ஓங்கியிருந்தது. உண்மையில் இலங்கை அந்த ஒப்பந்தத்தைத் தயாரிப்பதில் பங்கு பெறவில்லை. இந்தியாவால் தயாரிக்கப்பட்ட அந்த ஒப்பந்தத்தில் இலங்கை கையெழுத்து இட்டது மட்டுமே நிகழ்ந்தது.

ஒப்பந்தத்தைத் தயாரித்த இந்தியர்களும், இலங்கையின் யதாதார்த்த நிலைமைகள், இனப்பிரச்சினையின் நீண்ட வரலாறு, இந்த ஒப்பந்தம் எதிர்காலத்தில் ஏற்படுத்தப்போகும் தாக்கங்கள் பற்றி எவ்வித முன்னுணர்வும் இன்றியே அந்த ஒப்பந்தத்தைத் தயாரித்துள்ளார்கள் என்பதை இப்பொழுது பார்க்கையில் தெரிகிறது. அவர்கள் முற்றுமுழுதாக இந்தியாவின் சூழலை அப்படியே வைத்துக்கொண்டே, 13ஆவது திருத்தத்தையும் வரைந்துள்ளார்கள்.

இந்தியா ஒரு பெரிய நாடு. ஒவ்வொரு மாநிலமும் கோடிக்கணக்கான மக்களைக் கொண்டுள்ளன. பல டசின் கணக்கான மொழிகள் அங்கு பேசப்படுகின்றன. அதனால் ஒவ்வொரு மாநிலமும் சுயாட்சிக் கோரிக்கையை எழுப்பிய போது, அதிலிருந்து தப்புவதற்காக அப்போதைய இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு மொழிவாரி மாநிலங்களை அமைத்தார். அப்படியிருந்தும் பிற்காலத்தில் அந்த மாநிலத்திற்குள்ளே இருந்த சிறிய இனங்கள், அல்லது பின்தங்கிய பிரதேசங்கள் புது மாநிலக் கோரிக்கையை எழுப்பியதால், சில மாநிலங்கள் பிரிக்கப்பட்டு, ஜார்கண்ட் போன்ற புதிய மாநிலங்கள் உருவாகியுள்ளன. ஆந்திரா அண்மையில் பிரிக்கப்பட்டுள்ளது. தமிழர்களாக இருந்த போதிலும், தமிழ்நாடும் பாண்டிச்சேரியும் இரண்டு மாநிலங்களாகவே உள்ளன. தமிழ் நாட்டையும் இரண்டு மாநிலங்களாகப் பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை இருந்து வருகிறது.

அப்படியிருக்க 99 வீதம் தமிழர்கள் வாழும் இலங்கையின் வட மாகாணத்தையும், மூவின மக்கள் மக்கள் வாழும் (அதிலும் முஸ்லீம்களும் சிங்களவர்களும் சேர்ந்தால், தமிழர்களைவிட அவர்கள்தான் பெரும்பான்மையாக இருப்பார்கள்) கிழக்கு மாகாணத்தையும் தற்காலிகமாகத்தன்னும் ஆரம்பத்தில் இணைத்ததே இந்திய – இலங்கை அரசுகள் செய்த தவறாகும். இன்று ஒரு கருத்துக் கணிப்பு கிழக்கில் நடாத்தினால், அங்கு வாழும் தமிழர்களில் பெரும்பான்மையானவர்களே தமது மாகாணத்தை வடக்குடன் இணைப்பதை விரும்பமாட்டார்கள் என்பதே யதார்த்த நிலைமை. எனவே காலம் பிந்தித்தன்னும் இரண்டு மாகாணங்கள் இணைக்கப்படலாம் என 13ஆவது திருத்தத்தில் இருக்கும் ஏற்பாட்டைத் தற்போதைய அரசாங்கம் நீக்குவதற்கு எடுத்துள்ள முயற்சி வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

அதேபோல, ஒன்பது மாகாணசபைகளும் ஏற்றுக்கொண்டால்தான், மத்திய அரசாங்கம் எந்தவொரு நடவடிக்கையையும் செய்யலாம் என்ற சரத்து இருப்பதும் தவறானதாகும். அது அடிப்படையில் ஜனநாயக விரோதக் கருத்தாகும். ஜனநாயகத்தின் அடிப்படையே பெரும்பான்மை என்பதுதான். எல்லாம் நூறு வீதம் இருக்க வேண்டும் என்பதல்ல. அப்படி இருந்தால் அரசாங்கத்தால் எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாது. உதாரணமாக வடக்கு மாகாணசபையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றுமாக இருந்தால், எப்பொழுதும் அரச எதிர்ப்பிலேயே காலத்தைக் கடத்தும் கூட்டமைப்பு அரசாங்கத்தின் ஒவ்வொரு முயற்சிக்கும் இடையூறு விளைவித்துக்

கொண்டே இருக்கும். எனவே எல்லா மாகாணசபைகளும் ஏற்றால்தான் அரசாங்கம் செயற்பட முடியும் என்ற சரத்தையும் அரசாங்கம் நீக்க எடுத்துள்ள முயற்சியும் சரியான ஒன்றாகும்.

இப்பொழுது ஒத்தி வைக்கப்பட்டாலும், திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற சர்ச்சையில் இருந்து வரும் இரண்டு பிரதான விடயங்கள், மாகாணசபைகளுக்கு உள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களாகும்.

இதில் காணி அதிகாரத்தைப் பொறுத்தவரை ஒரு மாகாணத்தில் செயற்படும் மாகாண சபைக்கு, தனது மக்கள் சம்பந்தமான சில விடயங்களைச் செய்வதற்கு குறிப்பிட்ட அளவு காணி அதிகாரம் இருப்பது அவசியமாகும். அதேநேரத்தில் அந்த அதிகாரம் மத்திய அரசாங்கம் மாகாணங்களில் மத்திய அரசு சம்பந்தப்பட்ட சில விடயங்களைச் செய்வதற்குத் தடையாக இருக்கக்கூடாது. எனவே இந்த விடயத்தை முரண்பாடற்ற வகையில் சுமுகமாகச் செய்வதற்கு மத்திய – மாகாண அரசுகளைக் கொண்ட ஒரு கூட்டு ஆணைக்குழுவை அமைத்துச் செயற்படுவதே சிறந்த ஒரே வழிமுறையாகும்.

பொலிஸ் அதிகாரத்தைப் பொறுத்தவரை, இந்தியா போன்ற ஒரு மிகப்பெரிய நாட்டிலுள்ள, பெரிய பெரிய மாநிலங்களுக்குப் பொருத்தப்பாடு உடையதே தவிர, இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டுக்குப் பொருத்தமுடையதல்ல. பொலிஸ் அதிகாரம் என்ற கருத்தே கடந்த காலங்களில் அப்படையில் இருந்த பெரும்பான்மைச் சிங்கள இனப் பொலிசாரின் பாரபட்சத்தால் உருவான ஒன்றாகும். அதற்குத் தீர்வு பொலிஸ் படையில் சிறுபான்மை இனங்கள் வாழும் பிரதேசங்களில் அவர்களுடைய இனத்தைச் சேர்ந்த, அவர்களது மொழி தெரிந்த பொலிசாரை அதிக அளவில் நியமிப்பதுதான். அப்படியில்லாமல் சிங்கள பெரும்பான்மை இனத்தின் பாரபட்சத்திலிருந்து விடுபடுவதற்காக, தனித்தமிழ் பொலிஸ் படை அமைப்பதுதான் ஒரே வழி என்றால், உயர்சாதி தமிழர்களின் கொடூரங்களிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்களைப் பாதுகாப்பதற்காக, அந்த மக்களை மட்டுமே கொண்ட தனிப் பொலிஸ் படை ஒன்று அவர்களுக்காக அமைக்கப்பட வேண்டும். (ஏனெனில் 1960களில் தாழ்த்தப்பட்ட மக்கள் தமது அடிப்படை உாமைகளுக்காக வடக்கில் போராடிய பொழுது, அங்கிருந்த தமிழ் பொலிசார் எப்படி சாதி வெறியுடன் நடந்து கொண்டார்கள் என்பதை நாம் அறிவோம்)

அத்துடன் இலங்கையில் உள்ள அரசியல் கலாச்சாரத்தைப் பொறுத்தவரை, 9 மாகாணங்களுக்கும் 9 விதமான பொலிஸ் படை அமைந்தால், தேவையில்லாத நிர்வாக மற்றும் செலவுகள் ஏற்படுவது மட்டுமின்றி, அந்த மாகாணங்களில் ஆட்சியில் இருக்கும் கட்சிகள் ஏனைய கட்சிகள் மீது பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான ஒரு கருவியாகவும் அப்பொலிஸ் படைகள் இருக்கும் என்பதே உண்மையாகும். அத்துடன் மத்தியில் ஒரு கட்சியும், மாகாணத்தில் இன்னொரு கட்சியும் ஆட்சியிலிருந்தால், மத்திய பொலிசாருக்கும் மாகாணப் பொலிசாருக்கும் தேவையில்லாத

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க...

3ம் பக்கத்தொடர்ச்சி...

வேண்டுமென்ற மனநிலையில் தமிழ்மக்கள் உள்ளனர் என்று நீல் விடுகிறார். மேலும் அவர், மாகாணசபைத் தீர்வை இடைக்காலத் தீர்வாகவோ அல்லது ஒரு ஆரம்பப்புள்ளியாகவோ, எடுத்துக்கொள்ளவில்லையென்றும் கூறுகிறார். இதிலுள்ள சந்தர்ப்பவாத அரசியல்பற்றியும், முரண்நகைபற்றியும் சொல்லிப் புரிய வேண்டிய அவசியமில்லை.

எம்மைப்பொறுத்தவரை, மாகாணசபைத்தேர்தலை, கூட்டமைப்பு, தனது தமிழினவாதத்தையும், மேட்டுக்குடித்தன சொகுசு தேசியவாதத்தையும் பரப்புரை செய்வதற்கான ஒரு மேடையாகவே பயன்படுத்தும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை. நேர்மையான, மக்கள்நலன் சார்ந்த மூன்றாவது சக்தி தோற்றம் பெறுவதற்குரிய அல்லது வலுப்பெறுவதற்குரிய இடைவெளியை அரசு ஏற்படுத்திக் கொடுக்காதவரை தேசப்பற்றில்லாத இவர்களின் ஆதிக்கமே கோலோச்சும். இது தவிர, இவரது தெரிவு தொடர்பாக சம்பந்தன் இலக்குத்தவறாது சுடுபவர் என்றும், ஒரு கல்லில் இரண்டு பறவைகள்(இது ஐரோப்பியர்களின் வழக்கு) வீழ்த்தியவர் என்றும், சில ஊடகவியலாளர்கள் சம்பந்தனின் தனிப்பட்ட ஆளுமைக்கு அணி சேர்க்கின்றனர். சம்பந்தனோ, அல்லது தற்போதைய விக்னேஸ்வரனோ, ஆளுமையுடையவர்களாகவிருக்கலாம். ஆனால் எல்லா ஆளுமைகளுக்குப் பின்னாலும் வர்க்க நலன் உண்டென்பதை மறக்கக் கூடாது.

இந்துமதப் பற்றாளரான(முன்னர் சாயிபாபா பக்தராகவு மிருந்தவராம்) முன்னைநாள் நீதியரசர் விக்னேஸ்வரன், நேர்மையானவராகவும் ஊழலற்றவராகவும், இருக்கலாம். ஆனால் அவர் மக்களின் இன்ப துன்பங்களில் கலந்துகொள்ளாது 30 வருடங்களாக பேரழிவுகளையும், அவலங்களையும், சொல்லொணாத்துயரங்களையும் சந்தித்த தமிழ்மக்களை, கண்டும் காணாதிருந்து விட்டு இப்போது வானத்திலிருந்து குதித்து, வேற்றுக்கிரகத்திலிருந்து வந்து அரசியல் செய்வதுதான் எமக்கு விசனத்தைத் தருகிறது. 'மரம் பழுத்தால் வௌவால்கள் வரும்' என்று சும்மாவா சொன்னார்கள்?. இவற்றையெல்லாம் நினைக்கும்போது, எமக்கும் கேட்க வேண்டும்போல் தோன்றும் வீரபாண்டியகட்டப் பொம்மனின் சில வசனங்கள், என்னையும் மீறி தன்வயமாக வந்து விழுகிறது. அவை இவைதான் வாசித்துப் பாருங்கள்: ..."எங்களோடு வயலுக்கு வந்தாயா?, ஏற்றம் இறைத்தாயா?, நீர்பாய்ச்சி நெடுவயல் நிறையக்கண்டாயா?, நாற்று நட்டாயா?, களை பறித்தாயா?, கழனிவாழ் உழவர்க்கு கஞ்சிக்கலயம் சுமந்தாயா?"... *

முன்பக்கத்தொடர்ச்சி…

அதன் காரணமாகவே கடந்த காலங்களில் 13ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கான தீர்வல்ல என கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உட்பட அதன் உறுப்பினர்கள் அடிக்கடி கூறி வந்துள்ளனர். புலிகள் அழிந்த பின்னர் இந்தியாவின் வலியுறுத்தலாலும், வேறு வழிகள் எதுவும் இன்றியும் 13ஆவது திருத்தத்தை ஆதரிப்பது போல கூட்டமைப்பு நிலைப்பாட்டை எடுத்தாலும் உண்மை அதுவல்ல.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பங்குபற்றியதோ அல்லது தற்பொழுது வட மாகாணசபைத் தேர்தலில் பங்குபற்றுவதோ மாகாணசபை முறைமையை அவர்கள் ஏற்றுக் கொண்டதாக அர்த்தம் ஆகாது. புலம்பெயர் புலிக் குழுக்களின் ஆலோசனைப்படியும், தென்னிலங்கையிலுள்ள அரசுக்கெதிரான சிங்களப் பேரினவாத சக்திகளின் வேலைத் திட்டங்களுடனும் தன்னை இணைத்துச் செயல்படும் இன்றைய கூட்டமைப்புத் தலைமை, வட மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது வேறு விதமான கபட நோக்கத்துடன் ஆகும்.

அவர்கள் நோக்கம் வட மாகாணசபையைக் கைப்பற்றுவதன் மூலம், தற்பொழுது வடக்கில் அரசாங்கம் செய்து வரும் அபிவிருத்தித் திட்டங்களை சீர்குலைப்பதும், இனப்பிரச்சினையை மேலும் சிக்கல் ஆக்குவதும் ஆகும். அதாவது வட மாகாணசபையைக் கைப்பற்றி, அதை ஆக்கபூர்வாகச் செயல்பட விடாது 'வைக்கல் பட்டடை நாய்களாக' இருப்பது மட்டுமே அவர்கள் செய்யக்கூடிய காரியமாகும். இந்த உண்மை அண்மையில் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களில் தீவிர புலி ஆதரவாளரான சிறிதரனின் வாய் மூலமே வெளிப்பட்டுள்ளது.

சில நாட்களுக்கு முன்னர் பி.பி.சி தமிழோசைக்கு சிறீதரன் அளித்த ஒரு பேட்டியில், தாம் வட மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவது, மாகாணசபை முறை தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வாக மட்டுமின்றி, தற்காலிகத் தீர்வாகவும் கருதி அல்லவென்றும், தமிழ் மக்கள் தமக்குப் பின்னால்தான் நிற்கிறார்கள் என்பதை உலகத்திற்குக் காட்டுவதற்காகவே போட்டியிடுவதாகவும் கூறியுள்ளார். அவரது இந்தக் கூற்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு வட மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதின் உண்மையான நோக்கத்தை மிகவும் தெளிவாக அம்பலத்திற்குக் கொண்டு வந்துள்ளது.

அவர்களது இந்த 'வைக்கல் பட்டடை நாய்' விளையாட்டுக்கு இன்னொரு உதாரணத்தையும் இங்கு சுட்டிக்காட்டுவது மிகவும் பொருத்தமாக இருக்கும். போர் முடிவடைந்த பின்னர் வடக்கில் உள்ளூராட்சி சபைகளுக்குத் தேர்தல் நடந்த பொழுது, கூட்டமைப்பின் பேச்சாளர் எனத் தமக்குத்தாமே பட்டம் சூட்டிக் கொண்டுள்ள சுரேஸ் பிரேமச்சந்திரன் விடுத்த ஒரு அறிக்கையில், தாம் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவது அவற்றைக் கைப்பற்றி அவற்றின் மூலம் தமிழரின் சுய நிர்ணய உரிமைக் கோரிக்கையை வலுப்படுத்துவதற்கேயொழிய, வேறொன்றுக்கும் அல்ல எனக் கூறியிருந்தார்.

அவர் சொன்னபடியே பின்னர் நடந்தது. அதாவது பொதுமக்கள் எதிர்நோக்கிய பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண வேண்டிய கூட்டமைப்பின் நிர்வாகத்தின் கீழிருந்த உள்ளூராட்சி சபைகள் எந்தவொரு நடவடிக்கைகளையும் செய்யவில்லை. யாழ்.மாநகரசபை உட்பட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கைப்பற்றிய சபைகள் மிகவும் சிறப்பான முறையில் மக்களுக்கு சேவையாற்ற, கூட்டமைப்பு கைப்பற்றிய சபைகள் எதுவுமே செய்யாது, அவற்றுக்கென ஒதுக்கிய நிதிகள் செலவழிக்கப்படாது மீண்டும் திறைசேரிக்கே திரும்பிச் சென்ற கண்றாவி நடந்தது.

எனவே வட மாகாணசபையையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றுமாக இருந்தால், அவர்கள் கைப்பற்றிய உள்ளூராட்சி சபைகளுக்கு நடந்த கதிதான் அதற்கும் நடக்கும். வட பகுதி மக்கள் இத்தேர்தலில் வாக்களிப்பதன் நோக்கம், நீண்ட போரினால் சீரழிந்து போன தமது வாழ்வை அரச உதவியுடன் மீண்டும் கட்டி எழுப்புவதற்காகவே. அதை விடுத்து கூட்டமைப்பினர் கூறுவது போன்று தமிழ் மக்கள் தமக்குப் பின்னால் நிற்கிறார்கள் என்று உலகிற்குக் காட்ட வைப்பதற்காக அல்ல. கடந்த 60 வருடங்களுக்கும் மேலாக தமிழ் தலைமைகள் உலகிற்குக் காட்டுவதற்காக, அவர்களது கோரிக்கைகளை ஏற்று தமிழ் மக்கள் வாக்களித்து எந்தவிதமான பலனையும் காணவில்லை. இனிமேல் வாக்களித்தாலும் காணப் போவதும் இல்லை. தமது கொழுத்த சம்பளத்தில் குறைந்தபட்சம் இடம் பெயர்ந்த பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஒரு சாதாரண பென்சிலைக்கூட வாங்கிக் கொடுக்காத கூட்டமைப்புத் தலைவர்கள், மாகாணசபை மூலம் வட பகுதி மக்களுக்குக் கிடைக்கவிருக்கும் பலாபலன்களையும் இல்லாமல் செய்வதற்காகத்தான், இந்தத் தேர்தலில் வரிந்து கட்டிக்கொண்டு போட்டியிடுகிறார்கள் என்பதை வட பகுதி உணர்ந்து கொள்வது அவசியம்.

அவ்வாறில்லாமல் வட பகுதி மக்கள் இந்த மாகாணசபைத் தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பை வெற்றிபெற வைப்பார்களானால், மற்ற 8 மாகாணசபைகளும் செயற்பட, வட மாகாணசபை மட்டும் செயற்படாத நிலை ஏற்படும். அவ்வாறான ஒரு நிலையை ஏற்படாமல் தடுப்பது வட பகுதி மக்களின் வரலாற்றுக் கடமையாகும். *

**வானவில் 30வது இதழில் தவறு**

முனைவர் நாகேஸ்வரி அண்ணாமலை அவர்களின் கட்டுரையில், கொலம்பஸும் அவருடைய ஆட்களும் பஹாமாத் தீவுகள் ஒன்றில் வந்திறங்கிய நாள் 1942 அக்டோபர் 12 என்று தவறுதலாக வெளிவந்துள்ளது. அவர்கள் வந்திறங்கிய நாள் **1492 அக்டோபர்** 12 என்பதே சரியானதாகும்.

'Vaanavil' is a registered member of the National Ethnic Press and Media Council of Canada
வானவில்

# கிளிநொச்சி – முல்லை மாவட்டங்களில் புற்றுநோய் தாக்கம் அதிகரிப்பு!

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்கள் அடங்கிய வன்னிப் பகுதியில் புற்று நோய் தாக்கத்துக்குள்ளானவர்களின் தொகை அண்மைய ஆண்டுகளில் அதிகரித்துள்ளதாக இலங்கை சுகாதார அமைச்சின் தகவல் ஒன்று கூறுகிறது. அதன் காரணமாக கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் புதிதாக புற்று நோய் சிகிச்சைப் பிரிவொன்றை ஆரம்பிப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

இந்த நோய் அதிகரிப்புக்கு பலவிதமான காரணங்கள் கூறப்படுகின்றன. அதில் ஒன்று, 1995.ல் புலிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டை விட்டு அரச படைகளால் வெளியேற்றப்பட்ட பின்னர், அவர்கள் வன்னிப் பிரதேசத்தை தமது கட்டுப்பாட்டுப் பிரதேசமாக வைத்துக் கொண்டனர். அதன் காரணமாக அங்கு வாழ்ந்த மக்களுக்கு போதிய உணவுப் பொருட்கள் கிடைக்காமல் போனதுடன், கிடைத்தவையும் போசாக்கானவையாக இருக்கவில்லை. அதனால் மக்கள் தமது பாரம்பரிய உணவுப் பழக்கத்திலிருந்து மாறி, கிடைக்கிறதைச் சாப்பிடும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். அது அவர்களது உடலில் பல பாதிப்புகளை உண்டுபண்ணியது.

அத்துடன் சுத்தமான குடிநீர் மற்றும் சுகாதார வசதிகளும் பெரும்பான்மையான மக்களுக்குக் கிடைக்கவில்லை. அமைச்சர் செல்லையா குமாரசூரியர் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் கிளிநொச்சித் தொகுதி அமைப்பாளராக இருந்த காலத்தில் (1970 - 1977), கிளிநொச்சி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக பாரிய நீர்த்தாங்கி ஒன்று அவரது முயற்சியால் கிளிநொச்சி நகரில் நிறுவப்பட்டது. ஆனால் அந்த நீர்த்தாங்கியை புலிகள் குண்டு வைத்துத் தகர்த்து விட்டனர்.

இதுதவிர போரால் பாதிக்கப்பட்ட பொதுமக்களில் பலருக்கு ஏற்பட்ட மனச் சிதையும் இந்த நோய் அதிகரிப்பதற்கான காரணிகளில் ஒன்று என வைத்திய நிபுணர்கள் சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இறுதிக்கட்ட யுத்தத்தின்போது, அரச படைகளும் புலிகளும் பயன்படுத்திய மிகையான வெடிப்பொருட்களும் ஒரு காரணம் ஆகும். அவர்கள் பயன்படுத்திய பெருந்தொகையான வெடிப்பொருட்களில் அபாயகரமான, நச்சுத்தன்மையான இராசயனப் பொருட்கள் இருந்ததால், அவை பொதுமக்களின் உடலில் புற்றுநோய் தோன்றுவதற்கான காரணியாக இருந்துள்ளது. இந்த நச்சுப் பொருட்களின் தாக்கத்தால் மனிதர்கள் மாத்திரமின்றி, குடிநீர், தாவரங்கள், நிலம், மிருகங்கள், பறவைகள் என சகலதும் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் தாக்கம் வருங்காலத்தில் மேலும் கூடுதலாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெரும்பாலும் விவசாயிகளான இப்பிரதேச மக்கள், யுத்தத்திற்கு முந்திய காலகட்டத்தில் தாம் விளைவித்த சுத்தமான அரிசியையும், மரக்கறி வகைகளையும், பழங்களையும், நன்னீரில் வளர்ந்த மீன்களையும் உண்டு, மிகவும் ஆரோக்கியமாகத் திகழ்ந்தார்கள்.

ஆனால் எப்பொழுது புலி பாதுகாப்புத் தேடி அங்கு பதுங்கியதோ, அதைத் தேடி எப்பொழுது சிங்கங்கள் வேட்டையாடப் புறப்பட்டனவோ, அன்றே அந்த மக்களின் வாழ்வுக்கு உலை வைக்கப்பட்டுவிட்டது.

அரசு புலிகளை அழித்து போரில் வெற்றி பெற்றிருக்கலாம். ஆனால் அந்த மக்கள் இழந்த தமது உறவுகளையும் வாழ்க்கையையும் மீளப்பெற முடியாமல் தோல்வியடைந்து உள்ளார்கள். இந்த நிலைமையில் இப்பொழுது அவர்களுக்கு போரில் ஈடுபட்ட இரு பகுதியினரும் சேர்ந்து புற்றுநோயை இன்னொரு பரிசாக அளித்திருக்கிறார்கள்.

**இரத்தினம்**

---

14ம் பக்கத்தொடர்ச்சி…

மோதல்கள் ஏற்பட்டு, நாட்டின் சட்டம் ஒழுங்கு பாதிக்கப்படும் நிலையும் ஏற்படும். எனவே மாகாணசபைகளுக்கு இப்பொழுதுள்ள சூழலில் பொலிஸ் அதிகாரம் வழங்குவதென்பது, தற்கொலைக்கு ஒப்பானதாகும்.

எனவே இங்கு இரண்டு விடயங்கள் முக்கியமானவை.

ஒன்று, எவ்வித காரணத்தைக் கொண்டும் அரசியல் சாசனத்திலிருந்து 13ஆவது திருத்தச் சட்டத்தை அரசாங்கம் நீக்கக்கூடாது. அதேவேளை மாகாணசபை முறைமை ஒரு குறைந்தபட்ச அதிகாரப் பகிர்வு முறையாக இருந்தாலும், அதிலுள்ள நன்மைகள் கருதி, அதைப் பாதுகாப்பது தமிழ் மக்களின் கடமையாகும்.

இரண்டாவது, இந்தியாவுடன் செய்த ஒப்பந்தம் என்பதற்காக அது கடவுளால் எழுதப்பட்ட வேத வாக்கு அல்ல. 13ஆவது திருத்தச் சட்டத்தில் உள்ள, இலங்கையின் யதார்த்தத்துக்கும் இன்றைய நிலைக்கும் பொருந்தாத சரத்துகள் நிச்சயமாக திருத்தி அமைக்கப்பட வேண்டும்.

இவையே இலங்கை அரசாங்கமும், இலங்கையின் அனைத்து அரசியல் கட்சிகளும், இதில் சம்பந்தப்பட்டுள்ள இந்தியாவும் புரிந்துகொள்ள வேண்டிய விடயங்கள். *